


எமது கலாசாரத்துக்கான குறியீடுகள் உள்ளனவா?



தோழியைக் கழற்றிவிட்ட 'ஜெ'

டிசம்பர் 25 - டிசம்பர் 31, 2011 December 25 - December 31, 2011 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வாரமலர்




மௌன மனவெளிகள்

குறுநாவல் இந்த இதழில் ஆரம்பம்

# முகமூடி கிழியும் இன ஐக்கிய மாயை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமூடி கிழியும் இன ஐக்கிய மாயை!

"சமாதானமும் சந்தோசமும் நிலவுவதாக ஜனாதிபதி பெருமைப்பட்டுக் கொள்ளும் இலங்கையில் ஆட்கள் கடத்தப்படுவதும், காணாமற் போவதும் சாதாரண சம்பவங்கள் தான். ஆனால் மக்கள் போராட்டக்குழுவினர் கடத்தப்பட்டமை ஏனைய கடத்தல்களை விட வேறு விதமாகவே பாக்கப்பட வேண்டியவையாகும்."

சந்திரசேகர ஆசாத்



இந்த நாட்டில் சிறுபான்மை என்று எவரும் இல்லை. நாம் எல்லோரும் இலங்கைத் தேசத்தின் மக்கள். ஒரே தேசம் ஒரே மக்கள். நாம் எல்லோரும் இப்போது சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கிறோம்"

இது 2009ம் ஆண்டு போர் வெற்றியைக் கொண்டாடிய விழாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஆற்றிய உரையில் விடுக்கப்பட்ட பிரகடனம். அது மட்டுமின்றி அவர் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் இக்கருத்துகளை மீண்டும் மீண்டும் வலியுறுத்தத் தவறவில்லை.

நாட்டின் யதார்த்த நிலையை அறிந்திராத வெளிநாட்டில் வசிக்கும் ஒருவர் இந்த வார்த்தைகளைவைத்து 'கோல்பேஸ்' கடற்கரையில் சிங்களப் பெண்களும் தமிழ் இளைஞர்களும் கை கோர்த்து திரிவதாகவும் நல்லூரில் ஒரு தமிழ் இளம் பெண் தன் சிங்களக் காதலனுடன் முருகனை வழிபடுவதாகவும் கருதி விடக்கூடும். அது மட்டுமின்றி சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் வாழும் பகுதிகளெங்கும் ஆனந்தமும் அனுமதியும் நிலவும் ஒரு அற்புத பூமியாக இலங்கை மாறி விட்டதாக நம்பி விடுவார்கள்.

அது மட்டுமல்ல, "இப்போது நீங்கள் நாட்டின் எந்தப்பகுதிக்கும் சுதந்திரமாகப் போகலாம், வரலாம்" என்ற வார்த்தைகள் மேற் கூறிய நம்பிக்கைகளுக்கு வலுச் சேர்க்கவும் கூடும். இனங்களுக்கிடையேயான ஐக்கியம், சமாதானம், சந்தோசம் என ஒரு சொர்க்க பூமியாக இலங்கை விளங்குகிறது என்ற தோற்றப்பாட்டை இத்தகைய வார்த்தைகள் எற்படுத்தினால் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

ஆனால் யார்த்த நிலைமையை நோக்கினால் இவ் வார்த்தைகள் எவ்வளவு போலியானவை என்பது மிகத் தெளிவாகவே விளங்கும். அது மட்டுமின்றி சாதாரண தமிழ் மக்களும், சிங்கள மக்களும் ஐக்கியப்பட விடாமல் இருக்கும் வகையில் திட்டமிட்டு, வெகு நுணுக்கமாகவும் தீர்க்க தரிசனத்துடனும் விஷயங்கள் நகர்த்தப்படுவதையும், அதற்கான நிலைமைகள் உருவாக்கப்படுவதையும் நாம் அவதானிக்க முடியும்.

கடந்த மனித உரிமைகள் தினத்தன்று காணமற் போனோரைக் கண்டு பிடித்துத் தரக் கோரியும், சிறையில் அரசியல் காரணங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிக்கக் கோரியும் யாழ்ப்பாணத்தில் ஒரு ஆர்ப்பாட்டப் பேரணி இடம் பெற்றது. இதை தென்நிலங்கையைத் தளமாகக் கொண்ட மக்கள் போராட்டக் குழு ஏற்பாடு செய்திருந்தது. இதில் காணாமற் போனோரின் உறவுகள் மட்டுமின்றி வடபகுதியைச் சோர்ந்த பல அமைப்புகளும் கலந்து கொண்டன. இவ்வார்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்தப் பொலிசார் பல விதமான முயற்சிகளை மேற்கொண்ட போதும் மக்கள் அவற்றை மீறி உணர்வு பூர்வமாகப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்களை ஏற்றி வந்த பேருந்து சாரதிகளை இராணுவத்தினர் மிரட்டுமளவுக்கு கெடுபிடிகள் அமைந்திருந்தன.

எல்லாவற்றிலும் மேலாக இந்நிகழ்வை ஏற்பாடு செய்த மக்கள் போராட்டக்குழுவின் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவரும், அச்சுவேலியைச் சேர்ந்த இன்னொருவரும் ஊடகவியலாளர் சந்திப்புக்குச் சென்று கொண்டிருந்த போது கடத்தப்பட்டனர். இன்று வரை அவர்கள் மீட்கப்படவில்லை.

சமாதானமும் சந்தோசமும் நிலவுவதாக ஜனாதிபதி பெருமைப்பட்டுக் கொள்ளும் இலங்கையில் ஆட்கள் கடத்தப்படுவதும், காணாமற் போவதும் சாதாரண சம்பவங்கள் தான். ஆனால் மக்கள் போராட்டக்குழுவினர் கடத்தப்பட்டமை ஏனைய கடத்தல்களை விட வேறு விதமாகவே பாாக்கப்பட வேண்டியவையாகும்.

கடத்தப்படுதல், காணாமற்போதல் என்பன தமிழ் மக்கள் மட்டும் அனுபவிக்கும்பிரச்சினையல்ல. தென்னிலங்கையிலும் பல ஊடகவியலாளர்கள் உட்பட பலர் கடத்தப்பட்டுக் காணாமல் போயுள்ளனர். எனவே தமிழர்கள் சிங்களவர் என்ற பேதமின்றி கடத்தப்பட்டவர்களையும், காணாமற் போனோரையும் தேடித்தருமாறு கோரி அவர்களின் உறவுகள் போராட்டம் நடத்துகின்றனர். இங்கு இயல்பாகவே ஒரு இன ஐக்கியம் உருவாகிறது.

இதுவே உண்மையான இன ஐக்கியமும் கூட. இயல்பாகவே ஒருவர் துன்பத்தில் ஒருவர் பங்கு கொள்வது ஒரு இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்தும் வழமையான ஒரு மனிதப்பண்பாகும். இப்படியான ஒரு தூய்மையான இன ஐக்கியம் உருவாவதை அடக்குமுறையாளர்கள் என்றுமே விரும்புவதில்லை. எனவே தான் இந்த ஆர்ப்பாட்டத்தைக் குழப்ப முயற்சி செய்ததுடன் இதை ஏற்பாடு செய்தவர்களையும் கடத்துவதுமான நிலை உருவாக்கப்பட்டது.

இக்கடத்தல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற காரணத்தால் தென்னிலங்கையில் தமிழ் மக்கள் மீது ஐயத்தையும் வெறுப்பையும் மெல்ல மெல்ல உருவாக்கலாம் என்ற நப்பாசையும் இல்லாமல் இருக்க முடியாது.

இத்தகைய சம்பவங்கள் இதற்கு முன்பும் நடைபெறாமல் இல்லை! போரினால் பாதிக்கப்பட்ட யாழ்.பல்கலைக் கழக மாணவர்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கத் தென்னிலங்கைப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பினர் இங்கு வந்த போது அவர்கள் பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை. அது மட்டுமின்றி ஆரியகுளத்தில் வைத்து அவர்கள் இனந் தெரியாதவர்களால் தாக்கப்பட்டனர்.

ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனின் வீட்டில் கதைத்துக்கொண்டிருந்தபோது அவரும் அவரது உதவியாளரும் இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டனர்.

இவற்றிலிருந்து நாம் ஒரு விஷயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அதாவது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கிடையேயும், பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுக்கின்ற சக்திகளுக்கிடையேயுமான இன ஐக்கியம் உருவாகுவதை அடக்குமுறையாளர்கள் அறவே வெறுக்கின்றனர். அப்படியான ஒரு இன ஐக்கியம் உருவாகுவதைத் தடுக்க அடக்குமுறையாளர்கள் எந்த விதமான கேவலமான, கொடூரமான வழிமுறைகளையும் கையாளத் தயங்கமாட்டார்கள்.

ஆனால் அவர்கள் விரும்புவதெல்லாம் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் டக்ளஸ் தேவானந்தா, விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு முதலமைச்சர் சந்திரகாந்தன் ஆகியோருக்குமிடையேயான ஐக்கியம். ஆண்டான்களுக்கும் அடிமைகளுக்குமிடையேயான ஐக்கியம் போன்றதொரு ஐக்கியத்தையே அவர்கள் இன ஐக்கியமாகக் கூட்ட முனைகின்றனர்.

அதாவது அதிகார பீடத்தினருடன் சங்கமமாகி அவர்களுடன் ஐக்கியப்பட்டு அவர்களின் அடக்குமுறைக்குத் துணைபோவது, அவர்களின் அடக்குமுறையை நியாயப்படுத்துவது என்பனவே இன ஐக்கியம் என இவர்களால் கற்பிக்கப்படுகிறது. இன்று சமாதானமும் சுபீட்சமும் இவர்களுக்கு மட்டும் கிட்டுகிறது என்பதும் சாதாரண மக்களுக்கு அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதே வேளையில் சாதாரண கிராமப்புற சிங்கள மக்களையும் இனவெறியாளர்களாக மாற்றுவதில் சிங்களப் பேரினவாதிகளும், ஆட்சியாளர்களும் மிக சூட்சுமமான முறையில் காய்களை நகர்த்தி வருவதையும் நாம் கவனிக்கத் தவறிவிடக் கூடாது.

எல்லாக் கிராமிய மக்களையும் போகவே சிங்களக் கிராமிய மக்களும் அன்பு, பண்பு, மனித நியமம், நியாயத்தின் பக்கம் நிலை குலையாது நிற்பது போன்ற நல்ல அம்சங்களைக் கொண்டவர்களாகவே இருந்து வருகின்றனர். அவர்கள் கடவுளுக்கு அஞ்சி நடப்பவர்களாகவும் தங்கள் மொழி மீது அன்பு வைத்திருப்பவர்களாகவும் உள்ளனரேயொழிய மதவாதிகளாகவோ, இனவெறியர்களாகவோ இல்லை.

தமிழ் மக்கள் தாங்கள் பரம்பரையாக வாழ்ந்த மண்ணில் சுதந்திரமாக வாழும் உரிமையைத்தான் கோரினார்கள் என்பதையும், அதன் காரணமாகவே கடந்த 38 வருடங்களில் ஏறக்குறைய 2 இலட்சம் தமிழ் உயிர்கள் பறிக்கப்பட்டன என்பதையும் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைப் பறிப்பதற்கே இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் இணைக்கப்பட்டு பலி கொடுக்கப்பட்டனர் என்பதையும் சாதாரண கிராமிய சிங்கள மக்கள் உணர்வார்களாயின் அவர்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதை எவராலுமே தடுக்க முடியாது. எனவே பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டைப் பாதுகாத்த போர் என்ற மாயை பரப்பப்படுகிறது. அடிக்கடி பல்வேறு இடங்களிலும் போரின் வெற்றி குறித்த பிரமாண்டமான விழாக்கள் நடத்தப்பட்டு போதை ஊட்டப்படுகிறது.

அரசும், பௌத்த நிறுவனங்களும் கிராமிய மக்களை தங்கள் செல்விலேயே வடபகுதிக்கு அழைத்து வந்து போரின் அழிவுகளைக் காட்டி வெற்றியின் பெருமித உணர்வு ஊட்டப்படுகிறது. போரினால் ஏழ்மைக்குள்ளும், கூடார வாழ்வுக்குள்ளும் தள்ளப்பட்ட தமிழ் மக்கள் அவர்களின் காட்சிப் பொருள்களாகக் காட்டப்படுகின்றனர். எங்கும் புத்த சிலைகள் நிறுவப்பட்டு இலங்கை முழுவதுமே ஒரு சிங்கள தேசம் என்ற கருத்து அவர்களுக்கு ஊட்டப்படுகிறது.

மேலும் தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் சிங்கள மக்களைக் கொண்டு வந்து குடியேற்றப்படுவதன் மூலம் இன முரண்பாடுகளுக்கும் இனங்களுக்கிடையேயான பரஸ்பர வெறுப்புக்குமான சூழல் உருவாக்கப்படுகிறது.

ஒட்டுமொத்தத்தில் சாதாரண சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஐக்கியப்பட்டு விடக்கூடாது என்பதிலும், ஒருவரின் துயரங்களில் மற்றவர் பங்கு கொள்ள விடக்கூடாது என்பதிலும் மிக நுட்பமாக திட்டமிட்டு விஷயங்கள் நகர்த்தப்படுகின்றன. எனவே ஆட்சியாளர்கள் உண்மையான இன ஐக்கியம் உருவாகுவதை விரும்பவில்லை! இனி விரும்பப் போவதுமில்லை.

ஆனால் அடக்குமுறையாளர்கள் சிங்கள, தமிழ், முஸ்லீம்கள் என்ற பேதத்திற்கு அப்பால் ஐக்கியப்பட்டு நின்று மக்கள் விரோத நடவடிக்கைகளை முன்னெடுப்பதையே இன ஐக்கியம் எனக் காட்டிவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# படித்தவர்கள் வெளியேறிவிட்ட தீவு

உலகப் புகழ்பெற்ற கல்விமான், தமிழாராய்ச்சி மாநாட்டின் மூலம் தமிழின் பெருமையையும் தமிழரின் பாரம்பரியச் சிறப்புக்களையும் உலகெங்கனும் பறைசாற்றிய பெருமகன், தீவகத்தின் உயர்வுக்கும் மக்களின் அடைக்கும் உரிமையுடையவர். எங்கள் மண்ணின் மைந்தரான வணக்கத்துக்குரிய தனிநாயக அடிகளார், கத்தோலிக்கத் துறவு பூண்ட வெண்ணாடை தரித்து நிற்கும் கம்பீரமான தோற்றம் சிலையாக எமது துறைமுக வாயிலில் பலரையும் வரவேற்கிறது.

நாம் எமது முன்னோர் பற்றிப் பேசிப் பெருமையுறுதலும் பழமைச் சிறப்புக்களைக் கூறிப் பெருமிதம் கொண்டு மனம் பூரிப்பதும் இயல்பானதே. தொடரும் வரலாற்றுப் பதிவுகளில் எமது மண்ணின் வளம் எதிர்காலத்தின் எழுச்சிக்கு அத்திவாரமாக அமைதல் அவசியமாகிறது.

துறைமுகத்தில் இறங்கிக் கிராமத்திற்குள் நகருகின்றேன். ஊரில் அன்றிருந்த மக்கள் பலரின் முகங்கள் நினைவுக்கு வருகின்றன. எம்மண்ணில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று அறிஞர்களாய் கவிஞர்களாய் ஒளிர்ந்த கல்வியியலாளர்களில் ஒருவரைத் தவிர அனேகரை இப்பொழுது அங்கே காணவில்லை. எல்லோருமே ஊரை விட்டு வெளியேறி விட்டார்கள். ஊரில் தங்கிவிட்ட எம்மவர்களின் வாழ்வாதாரங்களைச் சிறப்புறச் செய்யும் வழிவகைகளைக் காணாமலேயே அவர்கள் வாழ்தல் என்ற இயந்திரமாகி நடமாடுகிறார்கள். தமக்கென நிரந்தரமான தொழில் வாய்ப்புகள் வாழ்க்கை வசதிகளைத் தேடிக் கொண்டு ஊரை விட்டு வெளியேறியோர் போக இருப்பவர்கள் ஒவ்வொருவரின் பார்வையிலும் எத்தனையோ எதிர்பார்ப்புகள்



தனிநாயகம் அடிகளார்

● — நெடுந்தீவு மகேஷ்

நிறைந்திருக்கின்றன. அவர்களில் பலரும் தமது தேவைகளுக்காக என்ன செய்யலாம் என அங்கலாய்க்கும் நிலையையும் பார்க்கின்றோம்.

பசித்திருப்பவனுக்கு ஒரு பிடி சோறு கிடைப்பின் அது பசி வேளையின் அமுதமாகின்றது. கூழோ கஞ்சியோ அவனது பசியைப் போக்குகின்ற தேவாமிர்தமாகிறது. இந்நிலையில் அதனை வழங்குபவன் தெய்வமாகப் போற்றப்பட வேண்டியவனே. தொழில் வாய்ப்புகளும் அதற்கான உதவிகளும் கிடைக்க உகந்த திட்டமிட்டுத் தருந்த படித்தவர்கள் தமது சுய தேவையைக் கருதி வெளியேறியமையால் சமூகம் தனித்து விடப்பட்டதான ஒரு தவிப்பு அங்கே காணப்படுகிறது.

இன்று அரசின் வீட்டுத் திட்டங்கள் மூலம் எம் உறவினர்கள் பலருக்கும் வீடுகள் கட்டும் உதவிகள் வழங்கப்படுகின்றன. மகிழ்ச்சியோடு அவற்றை ஏற்றுக் கொண்டு வீடுகளைக் கட்டிக் கொள்ளுகிறோம். அதே போன்று அரசாங்கத் தொழில் வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன. அவற்றைப் பெற்றுக்கொண்டு எம்மை நாமே பெருமைப்படுத்திக் கொள்ளுகிறோம். எமது மக்கள் எமது வளங்களைப் பயன்படுத்தி அவற்றை விருத்தி செய்யும் பணிகளில் ஈடுபடுவதற்கு அல்லது அவர்களை ஈடுபடுத்துவதற்குப் படித்தவர்களாகிய எம்மவர்களின் திட்டமிடல் அருகியே காணப்படுகின்றது.

துறைமுகத்தின் அயலிலே இயங்கிக் கொண்டிருக்கும் தையற் தொழிற்சாலைப் பார்க்கிறேன். எமது தீவகத்தின் கடற்படைப் பொறுப்பதிகாரி கப்டன் ருவசிங்க அவர்கள் தூரநோக்கோடு தொடங்கி, விருப்போடு செயற்படுத்தி ஊக்குவிப்பு வழங்கப்படுகின்ற, அந்த நிலையத்தில் தையற்பயிற்சி பெற்ற 50 இளம் பெண்கள் தற்பொழுது தையற்தொழிலைச் செய்து வருகின்றனர். அவர்களால் தைக்கப்படும் கடற்படையினருக்கான சீருடைகள் இலங்கைக் கடற்படையினரின் தேவையின் ஒரு சிறு பகுதியைப் பூர்த்தி செய்கிறது. தற்பொழுது பயிற்சி பெற்றிருப்பவர்கள் சுயமாகவே தொழிலைச் சுதந்திரமாக மேற்கொள்ள அவர்கள்



## தொலையா நினைவுகள்

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தையல் இயந்திரம் வழங்கவும் மேலும் பலருக்குப் பயிற்சி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது எங்கள் மனித வளப் பயன்பாட்டை சீராக்கும் ஒரு செயற்பாடாகும். இதில் ஈடுபாட்டோடு உழைக்கின்ற கடற்படை அதிகாரிகளின் சேவையைப் பாராட்டாமல் இருக்க இயலாது. படைத்தரப்பினர் மத்தியிலும் இத்தகைய சிந்தனையுடையோர் இருக்கிறார்கள் என்பதை இவருடைய கலந்துரையாடல் உணர்த்தியது. எம்மவரின் வளர்ச்சி நோக்கிய மேலான சிந்தனையோடும் செயற்பாட்டோடும் சுயலமற்ற கருத்துக்களோடும் கூடிய கடற்படைப் பொறுப்பதிகாரியின் வார்த்தைகள் அர்த்தமுள்ளவைகள். ஒவ்வொரு கிராமத்தவனையும் சிந்திக்கவும் செயற்படுத்தவும் தூண்டும் வலுவுடையன.

இதே வேளையில் எமது கிராமத்தின் பனை தென்னை வளங்கள் பயன்படுத்தப்படாமல் அழிவுறும் நிலையில் அவற்றை எமது மக்களின் தேவைக்குப் பயன்படுத்தவும் தொழில் வாய்ப்புக்களை திட்டமிடவும் வேண்டியது எம்மவர்களின் கடமையாகும். பனம்பொருள் உற்பத்திகளும் தென்னை வள உற்பத்திகளும் வீணை வதைத் தடுத்து அவற்றிலிருந்து பயன்பெற அவற்றை விருத்தி செய்வது அவசியமாகிறது. தென்னங்கிளிருந்து தயாராகும் விளக்குமாறு தொடக்கம் தென்னந்தும்பினால் தயாராகும் தும்புத்தடி வரையான வீட்டுப் பாவனைப் பொருட்கள் பலவற்றையும் தெற்கிலிருந்தே நாம் பெறுகின்றோம். என்ற உண்மை எமக்கு வேதனையைத் தரவில்லையா?

எமது வளங்களைப் பயன்படுத்தி எமது மக்களுக்கான வேலை வாய்ப்புகளை அதிகரிக்க முன் வந்துழைப்போம். எமது கிராம விருத்தியில் நாம் பின்னிற்காது பங்குகொள்வோம்.

* * *

# மக்களுக்காம் ஆட்சி வேண்டும்

● — கவிஞர் ஜெயசீலன்



[illegible] ஆட்சி அரசி யல் என்றெல்லாம் சொல்லி [illegible] நாம் [illegible] ஆட்சிக் [illegible] விரிந்தும் ஆழ்ந்தும் [illegible] கிடக்கின்றோம்.

[illegible] அரசியலைத் [illegible] மக்கள் [illegible] அனுபவிக்கின்றோம். அத்தகைய [illegible] பக்கங்களையே இந்தக் கவிஞர் படம் பிடித்துள்ளார்.

அரசியலென் சாக்கடையென் றுரைப்பதென்று
அவர் கேட்டார் வீட்டுக்குச் சாக்கடையே
இருப்பதைப்போல் நாட்டிலுள்ள கழிவெல்லாம்
இறங்குதற்கு அரசியல்தான் இடமாம் என்று
உரை சொன்னார் ஒருஅறிஞன் ஆமாம் நாறும்
உறுத்தர்களின் உறைவிடமாய் மானம் விற்கும்
சிரிப்பிடமாய் பொய் கறுப்புப் பணம் ஏமாற்றல்
செழிக்கின்ற சேறாய்த்தான் மக்கள் ஆட்சி

[illegible] ஆட்சி [illegible] கவிஞர் [illegible]

பெரும்பான்மை வாக்குகளைப் பெறுபவர்கள்
நிறபேதம் இனபேதம் நில பேதத்தைக்
கூறுபோட்டுக் குட்டி போட்டுப் பிரித்துத் தாக்கி
குத்து வெட்டுப்பட எங்கும் கோரக் காட்சி
ஜாதிகளை உரசி எழுந்தீயை மூட்டி
சாராய நதி திருப்பி கள்ள வாக்கு
போடுவதில் புரட்சிகட்டி கூட்டாய்ச் சேர்ந்து
புதுமை செய்யப் போகிறதாம் கட்சி ஆட்சி

[illegible]

கதிரையென்ற மூன்றெழுத்து மந்திரத்தை
கனவினிலும் செபித்து அதற்காய்த் தவித்தது மாய்ந்து
வது செய்தும் அதை அடையத் துடித்துப் பேய்தான்
இடந்தரினும் சேர்ந்து கொள்கை தனைக்கிழித்து
சதியெனினும் மதுவுக்கு சொந்த மண்ணின்
சனங்களின் மெய்த்தாகத்தை மறந்து வென்று
விதி செய்தோம் என்று விளையாட்டுக் காட்டும்
வெருளிகளின் அரசியலுக் கேதுதான் கற்று

[illegible]

கவிஞர் 2001 இல் தொகுத்து வெளியிட்ட [illegible] எனும் கவிதை நூலில் இருந்து [illegible] கவிதையே இது. இன்றுள்ள [illegible] ஆட்சி முறையில் [illegible] இதைத்தான் [illegible] கவிதை [illegible] காந்தத்தையும் [illegible] வாசகரின் உள்ளத்தில் தெளிவினை விளைக்கின்றன. அவரது கவிதை இலக்கியப்பணி தொடர வாழ்த்துகிறோம்.

மைதிலி தேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிகாலை நேரம் கீச் கீச் எனப் பறவைகள் ஒலிகளை எழுப்பி வானத்தில் பறக்கின்றன. அவளும் தனது கடமையைச் செய்ய தயாராகிறாள். வழமையாகவே நேரத்தோடு நித்திரை விட்டு எழுகின்றவள் எழும்புவதற்கு மனமில்லாமல் கைகளை உயர்த்தி விரல்களை முறித்து கொட்டாவி விட்டுக் கொண்டு பலவிதமான சிந்தனைகளை மனதிலே ஓடவிட்ட வண்ணம் படுத்திருந்தாள் சைந்தவி.

"வேலைக்குப் போகவேணுமெல்லே நேரத்தோடை எழும்புறவள் இன்டைக்குப் படுத்திருக்கிறாய். எழும்பனம்மா!" என்று தோரணையாக படுத்திருக்கும் தந்தை பாசம் மேலிட எழுப்புகிறார்.

"ஓம் அப்பா எழும்புவம் சரியான பனிப் பெய்யுது குளிராய்க் கிடக்குது" போர்வையை உடம்பில் போர்த்தவாறே தானும் அப்பாவும் இருக்கின்ற இன்றைய நிலையும் ஒரு கூட்டில் வாழ்ந்த குருவிகளைப் போல முன்னர் தாயும் சகோதரங்களுடனும் சந்தோசமாக வாழ்ந்ததையும் எண்ணிய போது அவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

தான் சந்தோசமாக வாழ்ந்தாலும் வாழ்க்கைப் பாதையில் தனக்கு ஏற்பட்ட துக்கங்களை நினைக்கும் போது கவலையாகவிருந்தது.

ஆம்! வவுனியாவில் உள்ள விவசாயக் கிராமமான கனகராயன் குளத்தில் முத்தையாவுக்கும் தங்கம்மாவுக்கும் பிறந்த நான்கு ஆண் பிள்ளைகளுக்கு கடைசித் தங்கையானாள் அவள் தளர்நடை நடந்து, மழலை மொழிபேசி சுட்டிப் பெண்ணாய் பெற்றோரை மகிழ்ச்சியில் திளைக்க வைத்தாள் சைந்தவி. காலையில் வயலுக்குச் சென்ற முத்தையா வேலைகளைச் செய்துவிட்டு வியர்த்துக்களைத்து வீட்டுக்கு வந்தார். குசினியில் ஆற அமர்ந்து கொண்டார். அவருக்கு காலை உணவையும் சூடான

# இழப்புகளைச் சுமந்து

கனகராயனூரான்

தேநீரையும் கொடுத்த தங்கம்மா ஆறுதலாய்ப் பேசத் தொடங்கினாள்.

"இஞ்சேரப்பா பிள்ளைக்கு படிக்கிற வயசு வந்திட்டுது அவளைப் படிக்கவைக்கவேணும் நல்ல நிலைக்கு உருவாக்கவேணும் அவள் படிச்ச பட்டதாரியாக வேணும்" என்ற தனது ஆசையை வெளிப்படுத்தினாள்.

பெண்பிள்ளை என்ன படிக்கிறது? நாளைக்கு இன்னொருத்தனுக்கு வாழ்க்கைப்படப் போறவள் உனக்கும் உதவியில்லை வீட்டை இருந்து ஒத்தாசையாக இருக்கட்டும் என்று பழங்காலக் கதை பேசினான் முத்தையா.

"உங்களுக்கென்ன விசரே நானும் படிக்க வேண்டிய வயசில படிப்பை நிறுத்தி என்னுடைய வாழ்க்கையை துலைச்சிட்டன் அதை இப்பதான் நான் உணருகிறன். அந்த மாதிரியான நிலைமை அவளுக்கும் வரக்கூடாது" என்று உறுதியாகநின்றாள் தங்கம்மா.

கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டாள் சைந்தவி. காலங்கள் உருண்டோடின. பல வகுப்புக்கள் கடந்தவள். பதினோராம் தரத்தை எட்டினாள்.

மண்ணில் யுத்தம் உக்கிரமடைந்த காலம். மக்கள் நாளாந்தம் இழப்புக்களைச் சந்தித்து வந்தனர். உயிர்களை உடைமைகளை இழந்து அகதி என்ற நாமத்தைப் பெற்றனர். செல்களுக்கு பயந்து மக்கள் அடைக்கலம் தேடி இடம் பெயர்ந்தனர். பெற்றோரை யுத்தத்தில் பலிகொடுத்த பெண்பிள்ளைகள் சிலர் இவளது வகுப்பில் சேர்ந்து தோழிகளாகினர்.

தோழிகள் சொல்லுகின்ற சோகமான சம்பவத்தை கேட்கும் போதெல்லாம் சைந்தவியின் மனம் தவிக்கும். அந்தப்பிள்ளைகள் தங்களுக்கு ஒளிமயமான எதிர்காலமில்லாத நிலையில் ஏக்கத்தோடும் கவலையோடும் இருந்தாள். அவர்களைப் பார்க்கும் போது அவர்கள் மீது அவளுக்கு அளவில்லாத பாசம் ஏற்பட்டது. அவள் அவர்களுக்கு உதவி செய்வாள். வறுமையே அறியாமல் வாழ்ந்தவள் சைந்தவி வழமையாக பாடசாலை வரும்போது காலை ஆகாரத்தை அதிகமாகக் கொண்டு வருவாள். அவர்களுக்கு அதனைப் பகிர்ந்து கொடுத்து தானும் உண்பாள். பாடசாலை உபகரணங்களை வாங்கிக் கொடுப்பாள். அவர்கள் தங்களுக்கு யாரும் இல்லையே என்ற உணர்வை மறக்கச் செய்ய வேண்டும் என்பதே அவளின் அவா!

படிப்பில் திறமை காட்டிய சைந்தவி பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்று நல்ல பெறுபேற்றுடன் பல்கலைக்கழகத்துக்கு தெரிவானாள். படித்து சிறப்பாகச் சித்தியெய்தியதும் ஆசிரிய நியமனமும் கிடைத்தது.

யுத்தம் துரத்திக் கொண்டேயிருந்தது. அதற்கு அவளது குடும்பமும் விதிவிலக்கல்ல. ஓட்டத்தின் முடிவு முள்ளிவாய்க்கால் வரை சென்றது. இரண்டு அண்ணன்மார் தவிர்க்க முடியாத படி இயக்கத்தில் இணைந்து காணாமல் போயினர். கனகராயன் குளம் பாடசாலையில் கடமையாற்றியவர் தனது குடும்பத்துடன் இடம் பெயர்ந்து பல இடங்களில் குடியேறி இறுதியில் முத்தையா குடும்பத்தினர் மாத்தளனில் வசித்தார்கள்.

உழைத்துச் சேர்த்த பணமெல்லாம் செலவழிந்து கரைந்து விட்ட நிலையில் பெற்றோர் சைந்தவியின் சம்பளத்தையே எதிர்பார்த்திருந்தனர்.

அதிகாலை எழும்பிய முத்தையா பால் வாங்குவதற்கு கியூவில் நிற்க வேண்டும் அதில் தானும் சென்று இணைந்து கொண்டார். அப்பொழுது கல்வித் திணைக்களத்தினர் தற்காலிகமாக ஓரிடத்தில் வைத்து ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கிறார்கள் என்ற செய்தி சைந்தவிக்கு கிடைத்தது. அச்செய்தி அவளுக்குத் தேவாமிர்தமாக இருந்தது. உடனே அந்த இடத்திற்கு அவசரமாகச் சென்றாள். அந்த வேளையில் தான் அந்தக் கொடுமை நிகழ்ந்தது. எங்கிருந்தோ வந்த செல் ஒன்று அவர்களின் கூடாரத்தின் மேல் விழுந்தது. தாயும் சகோதரர்களும் உடல் சிதறிப் பலியானார்கள்.

செய்தி அறிந்து ஓடிவந்து தந்தையும் மகளும் கதறி அழுதார்கள் தவித்தார்கள். அந்த அவலங்கள் நாள் நாளாந்தம் நடக்கிறதே என்று தம்மை ஆற்றிக் கொள்ளவும் முடியவில்லை. இறுதிக் கட்டத்தில் அங்கிருந்து வெளியேறிய மக்களோடு அவர்களும் இராணுவப் பாதுகாப்போடு நலன்புரி நிலையத்திற்கு வந்தார்கள்.

பல நாட்கள் முகாமிலிருந்து விட்டு, பின் மீள் குடியேறுவதற்கு ஊருக்குச் சென்றார்கள் யுத்தத்தின் வடுக்களைத் தாங்கி ஊர் மாறியிருந்தது. முன்னர் குடியிருந்த வீடுகளையும் காணவில்லை தாங்கள் வசித்த வீடு இருந்த இடமே தெரியவில்லை என கவலையடைந்தனர். இருப்பினும் மீண்டும் வாழ்தல் என்ற உறுதியோடு குறித்த இடத்தில் தற்காலிக குடிசையமைத்து வாழ்ந்து வருகின்றனர். சைந்தவி இழப்புக்களின் வலியை தாங்கிக்கொண்டு தளராத மனத்துடன் பாடசாலையில் தனக்கு கிடைக்கும் சம்பளத்தில் பெற்றோரை இழந்து தவிக்கும் பிள்ளைகளுக்கு ஒரு பகுதியை ஒதுக்கி உதவிகள் செய்வதில் இப்போது இன்பம் காண்கிறாள்.

சிறுகதை

# யாரும் அனாதையல்ல!

கோடை வெயில் சுட்டெரித்துக்கொண்டிருந்தது. ஓய்வுப்பாடவேளை என்பதால் ஜெனா ரீச்சர் நேற்றைய தினம் வகுப்பில் வைத்த பரீட்சைத் தாள்களைத் திருத்திக்கொண்டிருந்தாள், அருகே இன்னும் பல ஆசிரியர்கள் தமது தனிப்பட்ட விடயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர், அவற்றினைக் கேட்டுக்கொண்டிருக்க ஜெனா ரீச்சருக்குப் ஏனோ பிடிக்கவில்லை, வெளியே வந்து பார்த்தபோது 10ம் தர மாணவர்கள் ஓய்வாக பேசிக்கொண்டிருப்பதை அவதானித்துவிட்டு ஜெனாரீச்சர் வகுப்பறைக்குள் சென்று மீண்டும் பரீட்சைத் தாள்களை திருத்தியதும் மீண்டும் மாணவர்களது அமைதி கலைந்தது.

ஜெனா ரீச்சர் கண்டிப்பானவராக இருந்தாலும் வயதில் குறைந்தவர் என்பதால் மாணவர்களுடன் அன்பாகப் பழகும் சுபாவம் கொண்டிருந்தமையினால் மாணவர்களும் ஜெனா ரீச்சருடன் நெருங்கிப் பழகுவதுண்டு, இதனால் ஏனோ அன்பான முறையில் மாணவர்களை திசைமாற்றி கற்பித்து விடுவார், தமிழ்ப்பாட ஆசிரியை என்பதால் ஜெனா ரீச்சர் "அமைதியாய் இருந்து சிறுகதை ஒன்று எழுதிக் காட்டுங்க யார் நன்றாக எழுதிக் காட்டினாலும் பரிசு இருக்கு" என்ற போது மாணவர்கள் ஆவலுடன் அமர்ந்து சிந்தித்து எழுதுவதில் மூழ்கினர், ஜெனா ரீச்சர் கூறிய ஐந்து நிமிடத்துள் வகுப்பறை அமைதியாகியது, எல்லா மாணவர்களும் ஆவலாக எழுதுவதைப் பார்த்ததும் ஜெனா ரீச்சருக்கு தனது மாணவர்கள் பற்றி பெருமையாக இருந்தது. அரைமணி நேரத்தினுள் எல்லா மாணவர்களும் சிறுகதைகளோடு வந்தனர்.

இயல்பாக சிறுகதை படிப்பதென்றால் ஜெனா ரீச்சருக்கு அலாதிப்பிரியம், ஆவலுடன் ஒவ்வொரு பிரதிகளையும் வாசித்தபோது அதனுள் 'அநாதை' எனும் தலைப்பில் தீபியெனும் மாணவி எழுதியிருந்த சிறுகதை மனதைத் தொட்டுக்கொண்டது, வழமையாக ஜெனா ரீச்சருக்கு தீபியைப் பிடிக்கும், தீபியின் அமைதி படிப்பில் கவனம், அழகு இப்படி எல்லாமே ஜெனா ரீச்சருக்கு பிடித்தது தான், தீபிக்கு சிறுவயதிலேயே தாய் தந்தையில்லை, பெரிய பணக்கார வீட்டில் இருந்து வீட்டு வேலை செய்த படிதான் தீபியின் வாழ்வும் படிப்பும் தொடர்ந்தது. தீபியின் சோகம் ஏனோ ஜெனா ரீச்சரின் மனதையும் பாதித்தது, அனாதை எனும் சிறுகதையில் கூட தீபி தன்னையே கருவாய் எழுதியிருந்தாள், அருகேயழைத்து தீபியை "என்னம்மா தீபி இருக்கிற வீட்டில் பிரச்சினையா நான் ரீச்சர் மட்டுமல்ல ஒரு உறவாகவும் நினைத்து சொல்லம்மா" என்று கேட்டபோது தீபி அழுதேவிட்டாள்.

"எனக்கு கஸ்ரம் ரீச்சர், வீட்டில ஒரே வேலை, படிக்க வேண்டாமென்று பேசுறாங்க, என்னை அநாதைவிடுதியில் சேர்த்திடுங்க ரீச்சர்" என்றழுத போது ஜெனா ரீச்சரின் கண்களும் நனைந்து போனது,

அன்றுதொட்டு தீபியை மீட்டு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்த வேண்டுமென ஜெனா ரீச்சர் துடித்தாள், மனதினுள் ஒரு எண்ணம் தனது வீட்டில் தானொருபிள்ளை தானே தீபியை வீட்டிற்குக் கொண்டு வந்தால் தனது தனிமையும் கலைந்து போகும், ஒரு சகோதரியெனும் உறவும் வரும், தனது எண்ணத்தை ஜெனா ரீச்சர் தனது தாய் தந்தையிடம் கூற அவர்களும் மறுக்கவில்லை.



அடுத்தநாளே ஜெனா ரீச்சர் தனது தந்தையுடன் தீபி நின்ற வீட்டிற்குச் சென்று கேட்க முதலில் மறுத்தாலும் பின்பு "வளர்ந்தவுடன் சீதனம் கொடுக்க தம்மால் இயலாது" எனும் கேலிப் பேச்சைக் கூறி ஜெனா ரீச்சரிடம் தீபியை ஒப்படைத்தனர்.

ஓடிவந்து தீபி ஜெனா ரீச்சரின் கையைப் பிடித்துக் கொண்டு அழுதாள், "ரீச்சர் உங்களை எனக்குப் பிடிக்கும், உங்களைப் போல என்னையும் ரீச்சர் ஆக்குவீங்க என்ற நம்பிக்கையிருக்கு" என்றதும் தீபியை அணைத்து ஜெனா ரீச்சர் "யாருமே உலகில அநாதையில்லை, இனிமேல் நான் ரீச்சர் மட்டுமல்ல அக்காவும் கூட என்னோட பெற்றோர் உமக்கும் தான் பெற்றோர்" என்றவாறு ஜெனா ரீச்சர் தனது வீடுநோக்கி தீபியுடன் செல்ல, எங்கோ ஒலித்த கோயில் மணியோசை ஜெனா ரீச்சரின் நல்ல மனதை வாழ்த்துவதாய் தீபியின் மனதில்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடித்த வீடியோக்களை, நாம் விரும்பிய வடிவத்துக்கு மாற்றி சேமிக்க....




இணையத்தில் கிடைக்கும் பல்வகையான வீடியோக்களில் நமக்கு பிடித்த வீடியோக்களை, நாம் விரும்பிய வடிவத்துக்கு மாற்றி சேமிக்கலாம். நமக்கு உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது.

இணையத்தில் இருந்து வீடியோக்களை தரவிறக்கம் செய்ய அதிக நேரம் எடுக்கிறது. சில வீடியோக்களில் ஓடியோ மட்டும் தான் நமக்கு தேவைப்படும். அப்படி ஓடியோ மட்டும் தேவைப்பட்டாலும் நாம் முழு வீடியோவையும் தரவிறக்கி தான் கேட்க முடியும்.

இனி இணையத்தில் உள்ள வீடியோ முகவரியை கொடுத்து விரும்பிய வடிவத்துக்கு எளிதாக மாற்ற ஒரு தளம் உதவுகிறது.

இத்தளத்திற்குச் சென்றவுடன் தோன்றும் விண்டோவில் யூஆர்எல் என்று உள்ள கட்டத்திற்குள் எந்த தளத்தின் வீடியோவை மாற்ற வேண்டுமோ அந்த தளத்தின் வீடியோ முகவரியை கொடுக்கவும்.

அடுத்து இருக்கும் Output என்ற கட்டத்திற்குள் எந்த போர்மட்டில் நமக்கு சேமிக்க வேண்டும் என்பதையும் கொடுத்து Download என்று இருக்கும் பொத்தானை சொடுக்கினால் போதும். அடுத்து வரும் திரையில் நாம் தேர்ந்தெடுத்த வீடியோ சில நிமிடங்களில் குறிப்பிட்ட போர்மட்டுக்கு மாற்றப்பட்டு இருக்கும்.

இதில் இருக்கும் Download என்பதை சொடுக்கி நம் கணனியில் எளிதாக தரவிறக்கலாம். இனி வீடியோக்களில் உள்ள ஓடியோ மட்டும் தான் வேண்டும் என்று நினைப்பவர்கள் கூட சில நிமிடங்கள் மட்டுமே செலவு செய்து எளிதாக இத்தளத்தின் மூலம் பெறலாம்.

www.convertvideotoaudio.com

# மனதிற்கு ஓய்வளிக்கும் இசையயைப் பெற...



**www.ambient-mixer.com**

இசைக்கு மயங்காத உயிரினங்கள் என்று எதுவும் கிடையாது. ஒவ்வொரு இசைக்கும் ஒவ்வொரு வல்லமை உண்டு.

சில வகையான இசை நம்மை வீரம் உள்ளவர்களாக மாற்றும். சில வகை இசைகள் மனதை வருடும். சில வகையான இசை ஆட்டம் பாட்டத்தை உண்டு பண்ணும். அந்த வகையில் இன்று மனதிற்கு ஓய்வளிக்கும் இசையயை ஒரு தளம் கொடுக்கிறது.

அழகான படங்கள் சில நேரங்களில் நம் மனதைவிட்டுச் செல்லாமல் மகிழ்ச்சியை கொடுத்துக்கொண்டிருக்கும். அதே போல் தான் சில இனிமையன இசை நம் மனதிற்கும் உடலுக்கும் ஓய்வளிக்கும். இப்படி அழகான படமும் ஓய்வளிக்கும் இசையையும் நமக்கு இலவசமாக கொடுக்க ஒரு தளம் உள்ளது.

இயற்கையில் இருந்துவரும் மெல்லிய இசை நம் மனதிற்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் மகிழ்ச்சியை அளிக்கும். அந்த வகையில் இந்த தளத்தில் கிடைக்கும் பலவகையான இசை பகுதி வாரியாக பிரிக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு இசையும் அதற்கு தொடர்பான அழகான படத்துடன் காண்பதற்கும் கேட்பதற்கும் அழகாக இருக்கிறது. இசையின் ஒலி அளவை ஏற்றம் செய்வது முதல் நமக்கு தகுந்தபடி மாற்றி அமைக்கும்படியும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது இயற்கையில் கிடைக்கும் அத்தனை வகையான சத்தங்களையும் அழகாக பதிவு செய்து நம் மனதிற்கு மகிழ்வளிக்கும்.

# அதிக தரம் வாய்ந்த Youtube வீடியோக்களை தேடுவதற்கு...

இணையத்தில் Youtube பற்றி தெரியாதவர்கள் இருக்கவே முடியாது. Youtube என்பது ஒன்லைனில் வீடியோக் கள் பகிரும் தளமாகும்.

இதில் பல ஆயிரக்கணக்கான வீடியோக்கள் குவிந்து கிடக்கின்றன. இதில் நல்ல தரமான வீடியோக்களும் மற்றும் தரம் குறைந்த வீடியோக்களும் கலந்து இருக்கும்.

நாம் ஏதேனும் வீடியோவை ஆவலுடன் தேடினால் இதில் அனைத்து தரமுள்ள வீடியோக்களும் கலந்து வரும். ஒரு சில வீடியோக்கள் ஆரம்பத்தில் சரியாகப் போகும் நடுவில் பிரச்சினையை ஏற்படுத்தும். ஆகையால் நாம் தேடும்போதே தரம் மிகுந்த வீடியோக்களைத் தேடவேண்டும்.

இதற்காக எந்த மென்பொருளும் உபயோகிக்க தேவையில்லை. முதலில் நீங்கள் Youtube தளத்திற்குச் செல்லுங்கள்.

உங்களுக்கு youtube தளம் திறந்தவுடன் அங்கு உள்ள Search பாரில் உங்களுக்கு தேவையான வீடியோவுக்கு சம்பந்தமான வார்த்தையை கொடுக்கவும்.

இது நாம் அனைவரும் செய்யும் முறை. அந்த வார்த்தையை கொடுத்து சர்ச் செய்தால் அனைத்து தரமுள்ள வீடியோக்களும் கலந்து வரும்.


இதில் தரம் மிகுந்த (High Quality) வீடியோக்களை மட்டும் தனியே பிரிக்க நீங்கள் கொடுத்த வார்த்தைக்கு பக்கத்தில் '&fmt=18' (Stereo, 480 x 270 resolution) இந்த வரியை கொடுக்கவும்.

## பெண்களுக்கென தனி சமூக இணையத்தளம்

Luluvise
girl time all the time

ஆண்களின் தொல்லையை தவிர்ப்பதற்காக பெண்களுக்கென தனி சமூக இணையதளத்தை தொடங்கி உள்ளார் கனடாவைச் சேர்ந்த ஒரு பெண்மணி.

www.luluvise.com என்ற இந்த இணைய தளத்தில் ஆண்கள் சேர தடை விதிக்கப்பட்டுள்ளது. பேஸ்புக் இணையத்தளத்தையும் இணைக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.




# எந்த ...

ஆண்டிலும் இல்லாத வகையில் வரும் புத்தாண்டில் 2012ல் பல புதிய சாதனங்கள் தகவல் தொழில்நுட்ப சந்தையில் மாற்றங்களை ஏற்படுத்த இருக்கின்றன. இதனை இந்த ஆண்டில் அறிமுகமான, பேசப்படும் சாதனங்கள் உறுதி செய்கின்றன. நிச்சயமாய் மாற்றங்களை ஏற்படுத்தப்போகும் இவற்றைப் பற்றி இங்கு காணலாம்.

1. **விண்டோஸ் 8:** மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் 8 இயங்கு தளம் இதுவரை விண்டோஸ் இயக்கங்களில் இல்லாத பல புதுமைகளைக் கொண்டு வர இருக்கிறது.

பெர்சனல் கணனி மற்றும் டேப்ளட் கணனிகளுக்கிடையே உள்ள வேறுபாட்டினை உறுதியிட்டுக் கூற முடியாத வகையில் இரண்டையும் ஒரே இயக்கத்தில் கொண்டு வர உள்ளது.

இதனால் பெர்சனல் கணனி சந்தையின் இயக்கம் குறைந்து நோட்புக் கணனிகளுக்கும், டேப்ளட் கணனிகளுக்கும் உள்ள வேறுபாடு மறைய உள்ளது. குறிப்பாக தொடுதிரை பயன்பாடு இரண்டிலும் இந்த இயங்குதளங்களிலும் மூலம் ஒரே மாதிரியாக பயன்படுத்தப்பட இருக்கிறது.

2. **குரல் வழி கட்டளை:** தற்போது ஐ-போன் 4 எஸ், ஸ்மார்ட் போன்களில் இணைந்து கிடைக்கும் சிரி(Siri) இயக்க தொழில் நுட்பத்தின் வெற்றி, இன்று பலரை குரல் வழி கட்டளைக்கு தயார் படுத்தியுள்ளது.

இந்த மென்பொருள் தொழில்நுட்பத்தின் மூலம் குரல்வழி கட்டளைகளைக் கொடுத்து மெசேஜ் அனுப்பலாம், அழைப்புகளை வரிசைப்படுத்தி ஏற்படுத்தலாம், சந்திப்புகளை அமைக்கலாம்.

நீங்கள் சாதாரணமாகப் பேசி இதனைப் பகுப்படுத்தி, பின்னர் கட்டளைகளை போகிற போக்கில் அளிக்கலாம். அவை அனைத்தும் நிறைவேற்றப்படும்.

கைபேசியில் மைக் ஐகான் ஒன்றைத் தட்டி, செய்தியை குரல் வழிச் செய்தியாகத் தரலாம். அனைத்தும் தந்து முடித்தவுடன் உங்கள் செய்தி டெக்ஸ்ட் டாக மாற்றப்பட்டு, பின்னர் உங்கள் அனுமதி பெற்று அனுப்பப்படும்.

பெர்சனல் கணனியில் இது பயன்படுத்தப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை என்றே கூறலாம். இந்த தொழில் நுட்பம் எங்கு இயங்காது என்று தற்போது எண்ணப்படுகிறதோ, அங்கு இது சோதனை செய்து பார்க்கப்பட்டு நிச்சயம் கணனியிலும் பிற சாதனங்களிலும் கிடைக்கும், இணைய தளங்களிலும் சிரி இயக்க இன்டர்பேஸ் போல அமைக்கப்படலாம்.

இதன் மூலம் நாம் அதில் சென்று வருவது எளிதாக்கப்படலாம். பெரும்பாலும் இது போன்ற சோதனைகள் சீனாவில் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. **குறையும் மின்னஞ்சல் பயன்பாடு:** இது பல ஆண்டுகளாகவே பேசப்பட்டு வருகிறது. இனி மின்னஞ்சல் புரோகிராம்கள் தேவைப்படாது. 1992 ஆண்டுக்குப் பின் ஹொட்மெயில் அல்லது மின்னஞ்சல் சேவை தரத் தொடங்கிய நிறுவனங்களில், மின்னஞ்சல் கணக்கு ஒன்றை வைத்துக்கொண்டு அதனைப் பெருமையாகப் பேசுவது ஒரு டிஜிட்டல் ஸ்டேட்டஸ் அடையாளமாக இருந்து வந்தது.

ஆனால் இப்போது வளர்ந்து வரும் சிறுவர்கள் மின்னஞ்சல் கணக்கு எல்லாம் வைத்துக் கொள்வது இல்லை. சமூதாய இணையத்தளங்களில் தங்களைப் பதிவு செய்து கொண்டு செயல்படுகின்றனர். தங்கள் குழுக்களோடு பதிவுகளைத் தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றனர்.

4. **தொலைக்காட்சிகளில் மாற்றம்:** தொலைக்காட்சி பெட்டிகள் கணனியின் பயன்பாட்டினை மேற்கொள்ளும் காலம் வந்துவிட்டது. இணைய பயன்பாடு கொண்ட டிவிக்கள் வரத் தொடங்கி விட்டன.

திரைப்படங்களையும், தேவைப்படும் காட்சிகளையும், கேம்ஸ்களையும், விளையாட்டுப் போட்டிகளையும் கேட்டு வாங்கிப் பார்ப்பது, இந்த டிவிக்கள் மூலம் வளர்ச்சி அடையும். இத்தகைய சாதனங்கள், இனி கணனி மற்றும் இணையப் பயன்பாட்டினையே முதன்மையாகக் கொண்டு இயங்கும். அவற்றுடன் டிவி சேனல்களையும் காட்டும்.

5. **டிஜிட்டல் ஸ்டோர்கள்:** இனி அப்ளிகேஷன் சாப்ட்வேர் தொகுப்புகளையோ, வேறு இயங்குதளங்களையோ நாம் வெளியே வாங்க வேண்டியதிருக்காது. அந்த அந்த நிறுவனங்களின் அப்ளிகேஷன் ஸ்டோர்களிலிருந்து இணையம் வழியாக நம்பிக்கையுடன் வாங்கிக் கொள்ளலாம்.

ஆப்பிள், கூகுள் மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனங்கள் இந்த வழியில் நிலையான தங்கள் வர்த்தகத்தை வளர்த்துக் கொண்டு வருகின்றன.

6. **தடிமன் குறையும்:** டிஜிட்டல் சாதனங்களின் தடிமனைக் குறைத்து பாக்கெட்களில் வைத்து இயக்கும் அளவிற்கு, ஒவ்வொரு நிறுவனமும் தாங்கள் சாதனங்களின் தடிமனைக் குறைத்து வருகின்றன.

இதற்கு முதலில் வழி வகுத்தது ஐ-பேட் மற்றும் அல்ட்ரா புக் கணனிகளே. கணனி மட்டுமின்றி மொபைல் போன்கள், ஸ்மார்ட் போன்கள், டேப்ளட் பிசிக்கள், டிவிக்களும் தங்கள் தடிமன் குறைந்த பதிப்புகளை வெளியிட்டு வருகின்றன. வரும் 2012ல் இவை மட்டுமே விற்பனையாகும்.

7. **அனைத்திலும் டேப்ளட் பிசி:** சாம்சங் நிறுவனம் டேப்ளட் பிசி இணைந்த ரெப்ரிஜிரேட்டர் ஒன்றை வடிவமைத்து விற்பனைக்கு வெளியிட்டுள்ளது. இதனை மற்ற சாதனங்கள் வடிவமைக்கும் நிறுவனங்களும், ரெப்ரிஜிரேட்டர் தயாரிக்கும் நிறுவனங்களும் பின்பற்றலாம். கார்களின் டேஷ் போர்டில், டேப்ளட் பிசிக்கள் இணைந்து கிடைப்பது இனி கார் ஒன்ஷனின் அம்சமாகக் கருதப்படும்.


8. **ஒருவரோடு ஒருவர்:** இனி ஒன்லைன் கேம்ஸ் எல்லாம் தேவைப் படாது. ஸ்மார்ட் போன்கள் வழியாக இருவர் தனி நபர் விளையாட்டுப் போட்டியில் ஈடுபடலாம். இதற்கு நெட்வொர்க் தேவைப்படாது. இரண்டு போன்கள் தங்களுக்குள் நெட்வொர்க் உதவியின்றி பேசிக் கொள்ள முடியும். இந்த வசதி பயன்படுத்தப்பட்டு, பல வகையான தொடர்புகளை ஏற்படுத்தித் தரும்.

எனவே வரும் ஆண்டில் டிஜிட்டல் சாதனங்களின் தடிமன் மிகமிகக் குறைவாக இருக்கும், சமுதாய இணைப்பு தருவதாக இயங்கும், ஒருவருக்கொருவர் இணைப்பு கொள்வது, பேசுவதும், விளையாடுவதும், தகவல்களைப் பரிமாறிக் கொள்வதும் மிக மிக எளிதாக அமையும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்பு, ஆந்தை பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்கள்




1. அதிகபட்சமாக ராணி எறும்பு 30 வருடம் வரையும், வேலையாட்களும் காவலாளிகளும் 3 வருடம் வரையும், ஆண் எறும்பு சில மாதமும் உயிர் வாழ்கின்றன.(பூச்சி இனங்களில் மிகவும் அதிக காலம் உயிர் வாழக்கூடிய இனமாக ராணி எறும்பு உள்ளது)
2. ஒரு எறும்புக் கூட்டத்தில் (கூட்டில் அல்லது புற்றில்) சில நூறு முதல் பல லட்சம் வரையிலான எறும்புகள் உயிர் வாழ்கின்றன.
3. ஒரு கூட்டத்திற்கு ஒன்றிற்குமேற்பட்ட ராணிகளும் இருக்கும் அதே வேளையில் ராணி இல்லாது எறும்பு இருப்பது இல்லை.
4. எறும்பு இனமானது மிகச்சிறியது முதல் 5சென்றிமீற்றர் (2அங்குலம்) வரையுள்ளன. 10,000 மேலான வகையில் உள்ள எறும்புகளின் உணவானது தானியம், பங்கஸ், தேன், என பல வகைகளில் அடங்கும்.
5. மிகவும் சிறந்த மெய்யசக்தி (வாசனை நுகரும் சக்தி) கண்பார்வை உடைய எறும்புகளுக்கு சுவாசப்பைகள் இல்லை.
6. எறும்புகள் தமது உடல் எடையை விடவும் 50 மடங்கு சுமையினை சுமக்க வல்லன.
7. எறும்பு பற்றி கற்றல் (ஆராய்ச்சி) 'MYRMECOLOGY' என அழைக்கப்படுகிறது.
8. எறும்பின் மூளையில் 250,000 கலங்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.




9. உலகின் மூன்றில் ஒரு பங்கு எறும்புக்கூட்டம் அமேசன் காட்டில் இருப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.
10. மிகவும் திடகாத்திரமான சமூக அமைப்பினையும் பிராந்திய எல்லைகளையும் கொண்டுள்ள எறும்பு இனமானது வெப்பமானதும் ஈரப்பதம் உள்ள பகுதிகளில் பெரும்மளவு கூட்டங்களை கொண்டுள்ளது.
11. குடியிருப்பு இடங்களான நிலம் மரம் நிலத்தின் கீழ் என பல சிக்கல் நிறைந்த இயற்கையுடன் கூடிய வாழ்வியலை கொண்டுள்ள எறும்பு இனமானது மிகச் சிறந்த உயிர்தப்பி வாழும் (SURVIAL) உயிரினங்களில் முக்கியமானதாகவும் உள்ளது.
12. எறும்புகளின் மிகவும் ஒழுங்கான கட்டமைப்புக்கள், சமூக வாழ்வு, தமது வாழ்விடத்தை தமக்கு ஏற்றவாறு மாற்றிய அமைக்கும் இயல்பு, தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ளும் திறன் போன்றவையே எறும்புகளின் வெற்றிக்கு காரணங்களாக உள்ளன என்கின்றனர் ஆய்வாளர்கள்.





ஆந்தை ஸ்ட்ரைஜிபோர்மெஸ் இனத்தைச் சார்ந்த பறவை. இது பெரும்பாலும் தனித்தே காணப்படும். ஆந்தை இனத்தில் மொத்தம் 133 வகைகள் உள்ளன. அவற்றுள் மிகவும் அதிகமாக காணப்படும் வகை பார்ன் (BarnOwls) ஆந்தைகள். ஆந்தைகள் முன்னோக்கும் பெரிய கண்களையும் காதுகளையும் அலகையும் கொண்டவை.





இதனால் பார்க்கும் திசையை மாற்றுவதற்கு முழுத்தலையையும் திருப்பவேண்டியுள்ளது. இது தனது தலையை இரு திசைகளிலும் 270 பாகைகள் வரை திருப்பவல்லது.

ஆந்தைகள் தூரத்திலுள்ளவற்றைக் கூடத் தெளிவாகப் பார்க்க முடியாதவை. எனினும் அவற்றின் பார்வை மங்கலான வெளிச்சத்தில் மிகவும் சிறப்பானது. பல ஆந்தைகள் முழு இருட்டிலும் கூட ஒலியைப் பின்தொடர்ந்து வேட்டையாடக் கூடியவை.

இவை காடுகள், பாலைவனங்கள், புல்வெளிகள், வயல் வெளிகள், மற்றும் மரங்கள் நிறைந்த இடங்களில்,மரங்களின் மேல் அல்லது நிலத்தின்கீழ் உள்ள வளைகள், குகைகள், பாழடைந்த கட்டிடங்கள், பாறை இடுக்குகள் போன்றவற்றில் வாழ்கின்றன. ஆந்தைகள் அவற்றின் இனத்தைப் பொறுத்து 6 அங்குலத்திலிருந்து 28 அங்குலம் வரையும் 1 கிலோ முதல் 4 கிலோ எடை வரையும் உள்ளன. பெண் ஆந்தைகள் ஆண் ஆந்தைகளைவிடப் பெரியதாக இருக்கும். இவற்றின் இறகுகள் மிக மென்மையானவை. எனவே இவை பறக்கும்போது சத்தம் கேட்பது இல்லை.

கிட்டத்தட்ட கோளவடிவம் கொண்டவை. ஆந்தைகள் அவற்றின் வகையைப் பொறுத்து பன்னிரண்டு வரையிலான முட்டைகள் இடுகின்றன. பாறைகளின் விளிம்பிலோ, மரங்களில் வெறும் உதிர்ந்த இலைகள், இறக்கைகளின் மேலேயோ முட்டையிடும். இவை அடைகாத்து 15 முதல் 35 நாட்களில் குஞ்சுகள் பொரிக்க ஆரம்பிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பூங்கா

## என்னவென்றழைப்பது...?

அன்று விரிசடையோடு
விலங்கின் மீதமர்ந்து
கரந்தனில் ஆயுதத்துடன்
காட்சி தரும் பெண்ணை
பெண் தெய்வமாகப் போற்றினோம்.

இன்று - விரிசடை மீது
தலைக்கவசம் அணிந்து
உந்துருளி மீதமர்ந்து
செல்போனுடன்
காட்சிதரும் பெண்ணை
எப்படி அழைப்போம்...?

ச. காமதேவன்
குருமன் காடு.



## புரியாமை

மாடுக்காக
கொடுக்கப்படும் சீதனத்தால்
கொல்லப்படும் பெண்கள்
பல பேர்...
சமூகத்தில் அதிகம்
அது கொடுமை என்றால்
நீ கொடுத்தாலும்
திருமணம் செய்பவர்களை
என் செய்வதோ.

போ. புஷ்பா




## துளிகள்!

இரவுப் பொழுதின்
இனிய வேளையில்
தலைக்கேறிய சுமைகளை
தலையணைக்குள்
இறக்கிவைக்கிறேன்.
தூக்கத்திலேனும்
துயர்களை மறந்து
தூங்கவிடு!

உள்ளம் உனை
உண்மையாக வெறுத்துவிட்டது
பேனாவும் தானும் தான்
உன்னை எழுதுகிறது.!

ஒற்றை தீபமொன்றை- என்
ஒற்றைக் கண்ணில்
ஏற்றிவிட்டு வழிபார்க்கிறேன்
நீ வருவாயென்றல்ல
நீ வந்து போன தடயங்கள்
தென்படுகிறதா என்று!



## நிலவின் வருகை

உறவென்று சொல்வதற்கு
யாருமில்லை- ஆனால்
நீமட்டும்
தினமும் தவறாமல்
இரவில் வந்துவிட்டு
காலையில் மறைந்து
விடுகின்றாயே!- ஏன்?
வெண்ணிலவே
நீயுமா என்னை
வெறுக்கின்றாய்?

கொற்றையூர்,
சௌந்தமதி.

## சுதந்திரம் எங்கே?

கார் மேகங்களால்
மூடப்பட்டிருந்து
நிலவு வெளியே
வந்தது போல......
போர் மேகங்களால்
சூழப்பட்டு - நாமும்
வெளியே
வந்துவிட்டோம்
ஆனால்
நிலவின் சுதந்திரம்
இன்னும் நமக்கு
கிடைக்கவில்லையே!

ஆ. ஜெகா

## தீரவில்லை பிரச்சினை

குற்றம் சுமத்துவது
எதிர்க்கட்சி அதை
தட்டிக்கழிப்பது
அரசாட்சி!

பொய்யும் மெய்யும்
கலப்படம் அரசியலில்
புதுமை படைக்கவில்லை
தமிழர் பிரச்சினையில்!

தேய்பிறையானது
தமிழர் நிலை இன்னும்
தீர்க்கப்படவில்லை
தேசியப் பிரச்சினை!

அபிவிருத்தியில் இன்று
குறையில்லை ஆனால்
அத்தியாவசிய
பொருள்களுக்கு
விலைகுறையவில்லை!

முதூர்கிழக்கு.சேனையூரன்.


## வலி

நம் காதல்
வேர் விட்டு விருட்சமாக
வளர்ந்து விட்ட போதிலும்
எமக்குள் - புரிதல்
குழந்தை இன்னும்
பிரசவிக்கப்படவில்லையோ?

பூவில் தொடங்கி
பூகம்பமாய் மாறி
இரு இதயங்களையும்
ரணப்படுத்தும் சொல் வீச்சுக்கள்
தாராளமாய் இருவரிடமும்

இதயங்கள் ரணமாகி
இரத்தம் சொட்டும் போதும்
இருவரும் புரிந்து
கொள்ளவில்லை
வேதனையால் துடிப்பது
காதலால் பிணைந்து விட்ட நம்
ஒற்றை இதயம் தான்.

எம்.ஜெயந்தன்
வடாலிகன்.



## கவிஞர்களுக்கோர் எடுத்துக்காட்டு பாரதி

புரியுந் தமிழில் கவிதை
புனைந்து
புதுமை படைத்தவன்
பாரதி!

புரட்சிக் கவிஞன்
பாரதி உலகப்
புகழ் பெற்றவன்.

அடுப்பூதும் பெண்களுக்கு
படிப்பெதற்கு என்ற
அடக்கு முறைக்கு
ஆப்பு வைத்தவன்
பாரதி!!

சாதிகள் இல்லையடி
அனைவரும்
சமத்துவப் படி
வாழவேண்டியவர்கள் என்று
பறைசாற்றி
பைந்தமிழில்
கவிதை படைத்து
புதுமை செய்தவன்
பாரதி!

காளித்தாய் கண்ணபிரான்
தாசனான பாரதி
கவிஞர்களுக்கெல்லாம் ஓர்
எடுத்துக்காட்டு!

கிளிக்குயிலன் சேனையூர்-06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மம்பட்டியான், பிரஷாந்த் சொல்கிறார்

தடைபல கடந்து இன்று ரிலீஸ் ஆகியிருக்கிறது டொப் ஸ்டார் பிரஷாந்த் நடிக்கும் மம்பட்டியான் திரைப்படம்! இந்தப் படத்திற்குப்பின் தன் மகன் பிரஷாந்தை இனி எல்லோரும் மம்பட்டியான பிரஷாந்த் என்றே அழைப்பார்கள் என்கிறார் இப்படத்தின் இயக்குநரும் மாஜி மம்பட்டியானுமான நடிகர் தியாகராஜன்! அவரின் கூற்றுபடியே பிரஷாந்த் மம்பட்டியானாக வாழ்ந்தே இருக்கிறார் என்கின்றனர் படம் பார்த்த பலரும். படத்தில் இடம் பெற்றிருக்கும் பாடல்களும் பிரமாண்டமாகவும், பிரமாதமாகவும் வந்திருப்பது படத்தின் வெற்றிக்கு மேலும் பக்கபலமாக அமைந்துவிட்டது என்கின்றனர் விவரமறிந்தவர்கள். இதில் ஹைலைட்., காட்டு வழிப்போற பெண்ணே... கவலைப்படாதே... காட்டுப்பலி வழி மறைக்கும் கலங்கி நிற்காதே... மம்பட்டியான் பெயரைச் சொன்னா புலி ஒதுங்கும் பாரு.. எனத் தொடங்கித் தொடரும் பாடலை பழைய மம்பட்டியான் படத்தில் இளையராஜாவின் இசையில் இசைஞானியே பாடியிருந்தார். இப்பொழுது புதிய மம்பட்டியான் படத்தில் தமன் இசையில் ஓர் இடத்தில் தியாகராஜனும் புதுவித ரீ-மிக்ஸில் நடிகர் சிம்புவும் இரண்டு விதமாக பாடி அதில் பிரஷாந்தும், சிம்புவும் ஆடிப்பாடி ரசிகர்களின் எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது.



பிரியாமணி

# சினி.. பிட்ஸ்....

## மாறுபட்ட வேடங்களில் நடிக்க ஆசைப்படுகிறேன்

### ஸ்ருதி ஹாசன்

7ம் அறிவு படத்தை தொடர்ந்து தனுஷுடன் 3 படத்தில் நடித்து வருகிறார் ஸ்ருதி ஹாசன். இரண்டுமே நகரத்து பன்னணியிலான கதை. இதையடுத்து தெலுங்கில் கப்பர் சிங் என்ற படத்தில் நடிக்கிறார். இந்தியில் வெளியான தபங் படமே தெலுங்கில் இப்பெயரில் ரீமேக் ஆகிறது. இதில் கிராமத்து பெண்ணாக ஸ்ருதி ஹாசன் நடிக்கிறார். இதன் ஷூட்டிங் பொள்ளாச்சியில் நடந்தது. இதுபற்றி அவர் கூறும்போது, முதன்முறையாக கிராமத்து பெண்ணாக வேடம் ஏற்றிருக்கிறேன். பொள்ளாச்சியில் ஷூட்டிங். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேல் என்று பயிர்கள் நிறைந்த வயல் பகுதி. கண்ணுக்கு குளிர்ச்சியாக இருந்த அந்த இடத்தில் பவன் கல்யாணுடன் டூயட் காட்சியில் பங்கேற்றேன். ஒவ்வொரு அங்குல ஷூட்டிங்கையும் ரசித்துக்கொண்டிருக்கிறேன். மாறுபட்ட வேடங்களில் நடிக்க ஆசைப்படுகிறேன். மொழி எனக்கு தடை கிடையாது என்றார்.

## சினேகாவும் நயன்தாரா வழியில் பக்திபடமொன்றில் பக்தி பொங்க நடிக்கிறாராம்!

நடிகர் பரசன்னாவை திருமணம் செய்து கொள்ள உள்ள நடிகை ஸ்னேகா, திருமணத்திற்கு பறகு சினிமாவை விட்டு விலக உள்ளதாக தெலுங்கு சினிமா வட்டாரங்களில் பேச்சு அடிப்படுகிறது.

நடிகர் பரபுதேவா உடன் காதல் ஏற்பட்ட நயன்தாரா கடைசியாக ஸ்ரீ ராமராஜ்ஜியம் என்ற பக்தி படத்தில் சீதையாக நடித்து விட்டு சினிமாவில் இருந்து விலகினார். அதேபோல தற்போது நடிகர் பரசன்னாவின் காதல் வலையில் விழுந்துள்ள நடிகை ஸ்னேகா, தெலுங்கில் தயாராகி வரும் ராஜன்னா என்ற படத்தில் நடித்து வருகிறார்.

நயன்தாராவை, போல கடைசியாக பக்தி படம் ஒன்றில் நடித்துவிட்டு, சினிமாவுக்கு விடை பெற ஸ்னேகா திட்டமிட்டுள்ளதாகவும் தெலுங்கு திரைப்பட வட்டாரங்களில் பேச்சு அடிப்படுகிறது.

## 'ஆதிபகவன்' ஆட்டிப்படைக்கிறார்

நடிகர் ஜெயம் ரவியை ஆதிபகவன் படம் ரொம்பவே அலைக்கழித்துக் கொண்டிருக்கிறதாம். ஒரு படத்தின் கதையை எழுதி முடித்ததும் அதை எந்த காட்சியில் இருந்து வேண்டுமானாலும் படம் பிடிக்க ஆரம்பிக்கலாம் என்பதுதான் எல்லா மொழி சினிமாக்களின் நெளிவு சுளிவு. முதலில் க்ளைமாக்சில் இருந்தே கூட படம் பிடிக்கலாம். அல்லது நடுவில் ஏதாவது ஒரு இடத்திலிருந்து எடுப்பார்கள். அவரவர் வசதிக்கு ஏற்றார் போலதான் அமையும் இந்த வரிசைமுறை.

ஆனால் அமீர் இயக்கி வரும் ஆதிபகவன் சூட்டிங் அப்படி நடக்கவில்லையாம். டைட்டிலில் ஆரம்பித்து கிளைமாக்சை நோக்கி ஒவ்வொரு காட்சியாக படம் பிடித்துக் கொண்டிருக்கிறாராம். வெளிநாட்டில் படப்பிடிப்புக்கு போனால், அங்கு நடப்பதாக எழுதப்பட்ட அத்தனை சம்பவங்களையும் படம் பிடித்து விட்டு வருவதுதான் வழக்கம். ஆனால் ஒரே நாட்டுக்கு இரண்டு, மூன்று முறை போய் சூட்டிங் எடுக்கிற மாதிரி நடக்கிறதாம் இவரது படத்தில் மட்டும்.

இதனால் பெருத்த சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கிறார் படத்தின் நாயகன் ஜெயம் ரவி. ஒரே படத்திற்காக வருடக்கணக்கில் காத்திருப்பதும் நடிப்பதும் சுத்த போர் என நினைத்த அவர் அதிரடியாக ஒரு முடிவு எடுத்திருக்கிறார். அதாகப்பட்டது, இனிமேல் எந்த படத்திற்காகவாவது கெட்டப் மாற்ற வேண்டும் என்றால் நடிக்கக்கூடாது என்பதுதானாம் அந்த முடிவு.



## வெளியே சுற்றும் காதல் பறவைகள்!

சமீபத்தில் கோலிவுட் பக்கம் புதிய காதல் பறவை பறந்துக் கொண்டிருக்கிறது. அது வேறு யாருமில்லை சினேகாவும், பிரசன்னாவும்தான். விரைவில் திருமணம் செய்துகொள் எப்போகும் இவர்கள், தற்போது வெளியே ஜோடியாக சுற்ற ஆரம்பித்துள்ளனர். ஷொப்பிங், பார்ட்டி, என அனைத்து இடங்களுக்கும் ஜோடியாக சென்று வருகின்றனர். இதனை யடுத்து இவர்களின் திருமண தேதி விரைவில் அறிவிக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த நடிகையும் என்னுடன் போட்டி போட முடியாது : தமன்னா சவால்!



கையில் பல படங்களுடன் பிஸியாக இருக்கும் தன் முன்பு எந்த நடிகையும் சவாலுக்கு நிற்க முடியாது என்று நடிகை தமன்னா கூறினார். இதுபற்றி அவர் அளித்த பேட்டி:

சினிமா ஒரு கவர்ச்சி உலகம். ஒவ்வொரு படத்துக்கும் புதுப்புது ஹீரோயின்கள் தேவைப்படுகிறார்கள். இதனால் போட்டி என்பது ஒவ்வொருவருக்கும் மிரட்டலாகவே உள்ளது. சினிமாவில் மட்டுமல்ல, எங்கு சென்றாலும் இதுதான் நிலை. அதற்கு நம்மை தயார்படுத்திக்கொள்ளாவிட்டால் வெற்றி பெறுவது கடினம். சினிமாவை பொருத்தவரை நடிகைகளுக்கு அற்ப ஆயுள்தான் இருக்கிறது. ஹீரோக்கள்தான் நீண்ட ஆயுள் படைத்தவர்கள்.

இந்த நிலை கொஞ்சம் மாறி இருக்கிறது. ஹேப்ப டேஸ் என்ற தெலுங்குப் படம் வெற்றி பெறாமல் இருந்திருந்தால் இந்நேரம் எங்காவது ஒரு விமானத்தில் பணிப்பெண்ணாக இருந்திருப்பேன். அந்த படம் வெற்றி பெற்று, நான் முழு நேர நடிகையானது கடவுள் அருள், என் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். தற்போது 5 பெரிய படங்களில் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறேன். இதுதவிர, 20 படங்கள் என் கால்ஷீட்டுக்காக வெயிட்டிங்கில் இருக்கின்றன. 2018ம் ஆண்டு வரை தடையின்றி நடிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. எந்த நடிகையும் என்னிடம் சவாலுக்கு நிற்க முடியாது. இவ்வாறு தமன்னா கூறினார்.

## திருப்பதியில் அபராதம்

ஜீன்ஸ் பேண்ட், டீ சர்ட் அணிந்து திருப்பதி கோயிலுக்குள் சென்றது ஏன்? என்பதற்கு நடிகை தமன்னா விளக்கம் அளித்துள்ளார். கோயில் நிர்வாகம் தனக்கு அபராதம் விதித்த பிறகும் இதனை பிரச்னையாக்கவது ஏன் என்றே புரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். நடிகை தமன்னா திருப்பதி கோவிலில் சில தினங்களுக்கு முன் ஜீன்ஸ் பேண்ட், டீ சர்ட்டில் சென்று சாமி கும்பிட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது. ராம்சரனுடன் தெலுங்கு படமொன்றில் தமன்னா நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்பு திருப்பதி அருகே நடந்தது. அப்போது கோவிலுக்கு சென்று வழிபட்டார்.திருப்பதி கோவிலுக்கு பெண்கள் சேலை அல்லது சல்வார் கமீஸ் அணிந்துதான் வர வேண்டும் என்று விதி உள்ளது. ஆனால் ஜீன்ஸ் பேண்டில் தரிசனம் செய்த தமன்னாவை கோவில் நிர்வாகத்தினர் எதிர்க்கவில்லை. பக்தர்கள் கண்டித்தனர்.

இதுபற்றி தமன்னா தன்னிலை விளக்கம் அளித்துள்ளார். அவர் அளித்துள்ள பேட்டியில், திருப்பதி கோவிலில் சாமி தரிசனம் செய்தது திட்டமிடாமல் அவசரமாக நடந்த ஒன்று. படப்பிடிப்பு குழுவினர் கோவிலுக்கு போகலாம் என்றதால் போனோம். நான் எப்போதுமே கோவில்களுக்கு சேலை அல்லது சல்வார் கமீஸ் அணிந்துதான் செல்வேன். ஆனால் இப்போது அவசரமாக போனதால் அப்படி செய்யவில்லை. அங்கு சாமி கும்பிட்ட போது கோவில் நிர்வாகத்தினர் யாரும் எதிர்க்கவில்லை. ஆனால் சில பத்திரிகைள்தான் இந்த பிரச்சினையை பெரிதுப்படுத்துகின்றன. என் தரிசனத்தை நான் முடித்து கிளம்பி விட்டேன். கோவில் நிர்வாகம் இதற்காக எனக்கு அபராதம் விதித்தது என்றார்.

## சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித்!

பில்லா 22 படத்தினைத் தொடர்ந்து விஷ்ணுவர்தன் இயக்கத்தில் நடிக்க இருக்கிறார் அஜீத். விஷ்ணுவர்தன் படத்திற்குப் பிறகு விஜயா புரோடக்ஷன்ஸ் தயாரிக்கும் படத்தில் நடிக்க இருக்கிறார். அப்படத்தினை சிறுத்தை படத்தினை இயக்கிய சிவா இயக்க இருக்கிறார். முதல் படமான சிறுத்தை வரவேற்பை பெற்றதை அடுத்து, அடுத்த படமே அஜீத் என்ற மாஸ் ஹீரோவை வைத்து இயக்க இருப்பதால் டபுள் உற்சாகத்தில் இருக்கிறார் சிவா. அஜீத்தை இயக்க இருப்பது குறித்து சிவா கூறியதாவது, சிறுத்தை படத்தின் வரவேற்பை அடுத்து தமிழில் அஜீத்துடன் இணைந்து இருப்பதால் அப்படத்திற்கு பெரும் எதிர்பார்ப்பு இருக்கிறது.

அஜீத் சார் ஒரு முறை போன் செய்து விஜயா புரோடக்ஷன்ஸ் தயாரிப்பல் தான் ஒப்பந்தம் ஆகியிருப்பது குறித்து பேசினார். நான் அவரை பார்க்கச் சென்றேன். கொஞ்சம் தயக்கத்துடன்தான் சென்றேன். அவர் என்னிடம் நட்போடு பேசினார். என் தயக்கங்கள் உடைந்தன. அவரிடன் ஒரு கதையின் சுருக்கத்தை மட்டும் சொன்னேன். அது அவருக்கு மிகவும் படித்து இருந்தது. தற்போது அக்கதைக்கு திரைக்கதை எழுதி வருகிறேன். ஜனவரி மாதம் அஜீத்திடம் முழுக்கதையும் கூறி விடுவேன். நீங்கள் அஜீத்தை ஒரு புதுமையான வேடத்தில் பார்ப்பது உறுதி, என்று கூறியுள்ள சிவா இப்போது தெலுங்கில் ரவி தேஜா நடிக்கும் படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார்.



## விமர்சனம்



## வெண்மணி

மந்திரி செந்தில்குமாருக்கு சொந்தமான இரும்பு ஆலையில் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டுப் போராடுகின்றனர். இதனால் ஆவேசமாகும் மந்திரி தொழிற்சங்க தலைவரையும் அவன் கூட்டாளிகளையும் கொல்கிறார். தொழிற்சங்க தலைவன் மகன் மந்திரியை பழி வாங்கத் துடிக்கிறான். இதற்காக காட்டுக்குள் பதுங்கிய புரட்சியாளர்களின் தலைவன் கிருபாகரனை சந்தித்து உதவி கேட்கிறான். அவன் நகரத்துக்குள் வந்து மந்திரியை போட்டுத் தள்ளுவது கிளைமாக்ஸ்

கிருபாகரனாக வரும் கார்த்திக் ஜெய் புரட்சிகாரத் தலைவன் கெட்டப்பல் மிடுக்கு காட்டுகிறார். வெண்மணிப் படுகொலை பளாஷ்பேக் கதையில் கிராமத்துக்குள் புகுந்து பண்ணையாரை தீர்த்து கட்ட வியூகம் வகுப்பது தொழிலாளர்களை மந்திரி இரும்பு கலவைக்குள் போட்டு கொல்வது கொடூரம் மந்திரியை அதே பாணியில் சாகடிக்கும் கிளை மாக்ஸ் சீன்கள் விறுவிறுப்பு

கதாக திருமாவளவன் இயக்கி யுள்ளார். பண்ணையாராக ஓ.ஏ. கே.சுந்தர், மந்திரியாக பெரோஸ் கான் வருகின்றனர். வெண்மணியில் நடந்த நிஜமான கொலை நிகழ்வுகளை இக்கால கதையோட்டத்தில் இணைத்து காட்சிப்படுத்தி இருப்பது புதுமை. புரட்சியாளர்கள் ஏதோதோ செய்யப் போகிறார்கள் என பார்த்தால் நீளமாக பேசுவதும், ஓடுவதுமாக உள்ளனர். திரைக் கதையை வலுவாக செதுக்கி இருக்க லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது செப்டெம்பர் மாதம். அப்பிராந்தியத்தில் வாத்து வேட்டையாடும் காலம், வாத்து வேட்டையில் ஆர்வத்தோடும், ரசனையோடும் ஈடுபடுபவர்களுக்கு அது வசந்தகாலம்.

காலைக்கதிரவனின் மட்டமான ஒளிக்கதிர்கள் நீரலைகளின் மீது தெறித்து மின்னிக் கொண்டிருந்தன. காலைப் பொழுது ரம்மியமாக இருந்தது. எதிரே தொலைவில் தெரியும் வானம், சதுப்பு நில வெளிகள் ஆங்காங்கே சிறு சிறு பற்றைக் காடுகளுடன் காட்சியளித்தது.

அலஸ்காவின் உள்ள நிக் நதி கடலோடு கலக்கும் கழிமுகத்தில் உள்ள படகுத் துறையில் தளத்தில் இருவர் நின்றிருந்தனர். ஒருவர் ரோனி வயது 37 மற்றவர் ஜெயின் வயது 39 இருவரும் வாத்து வேட்டையில் அலாதிப் பிரியர்கள். படகுத் துறையில் நின்றிருந்த சிறிய இயந்திர படகொன்றில் வாத்து வேட்டைக்குப் புறப்பட்டனர்.

சில மணிகள் நேரத்தின் பின்னர் அவர்கள் 10அடி ஆழமான அலைகள் நிறைந்த சதுப்பு நிலத்தின் கரையினை அண்டிய கடற்பகுதியை அடைந்தனர்.

படகினைக் கரைக்குச் செலுத்தி அதனை நங்கூரமிட்டு தடிப்பான சேற்று நிலத்தினூடாக வெகு சிரமத்துடன் அடியெடுத்து வைத்து நடக்க ஆரம்பித்தனர்.

"அப்பாடா! இச்சேறு பிசினைப் போலக் காலோடு ஒட்டுகின்றது" என்றான் ரோனி. அவன் வலது காலை நீளமாக எட்டி வைத்து விரைவாக நடக்க முயற்சித்த வேளையில் இடதுகாலை சேற்றிலிருந்தும் இழுத்தெடுத்து முன்வைத்து நகர்வது மிகவும் சிரமமாக இருந்தது. பலத்த பிரயாசையுடன் கால்களை ஒன்றுமாறி ஒன்றாக சகதியில் இருந்து இழுத்தெடுத்து நகர வேண்டியிருந்தது.

ஆசை யாரைவிட்டது. வாத்துவேட்டையின் மீது உள்ள ஆர்வத்தினால் இச்சிரமங்களெல்லாம் அற்பமாக அவனுக்குத் தோன்றியது.

திடீரென, அவனது இருகால்களும் சேற்றில் மாட்டிக் கொண்டன. முன்னோக்கி நகர இயன்ற மட்டும் கால்களை இழுத்தெடுக்க முயற்சித்தான். பக்கவாட்டாகவும் முயன்றான் பாதங்கள் சுளுக்கிக் கொண்டன. தான் அச் சதுப்பு நிலத்தில் சிறிது சிறிதாகப் புதைவதை உணர்ந்தான். சில கணங்களுக்குள் அவனது முழங்கால் வரையில் இரண்டு கால்களையும் சதுப்புநிலம் விழுங்கிவிட்டது.

"ஐயோ புதைமணல்" ரோனி கத்தினான்... "எனக்கு உதவி செய்யுங்கள் காப்பாற்றுங்கள்" என உச்சக்குரலில் பயத்தில் உதவி கோரிக் குரல் எழுப்பினான்.

ரோனியும், ஜெயினும் ஒருமித்துப் பதினைந்து வருடங்களாக வேட்டையாடிய நண்பர்கள். அத்துடன் அவர்கள் இருவருக்கும் அலஸ்காவில் உள்ள ஆபத்தான இடங்கள், பல வண்டல்கள் படிந்த புதை மணற்பரப்புகளைப் பற்றி நன்கு தெரியும்.


சாதாரண சேற்று மணல் போலக் காட்சியளிக்கும் அம்மணல் தரையானது சமுத்திரத்து டனும் நறுமணப்பவுடர் போன்றது. பொதுவாக வெண்மை நிறமானவைகள் படர்ந்து காணப்படும். ஈரத்தன்மையுள்ள வேளையில் கடினமான சேறு போல் இருக்கும் தரை வெப்பமான சூழ்நிலையில் சற்றே இறுக்கமடைந்து தோன்றும். சாதாரணமாயிருக்கும் தருணத்தில் அதில் சிக்கிக் கொள்பவர்கள், துர்ப்பாக்கியவான்களே...!

ஜெயின் மெல்லமாகவும், மிகவும் அவதானமாகவும் ரோனியை நோக்கி நகர்ந்தான். தனது இடுப்புப்பட்டியைக் கழற்றி ரோனி பக்கமாக எறிந்து அதன் முனையினை இறுகப் பற்றிப்பிடிக்குமாறு கூறினான். பட்டியை இறுகப்பற்றிய வண்ணம் ஜெயின் ரோனியை பலம் முழுவதையும் செலுத்தி இழுக்கத் தன்னாலான மட்டும் முனைந்தான்.

ரோனி கடும் சிரமப்பட்டு ஒவ்வொரு காலாக இழுத்து நகரத் தீவிர முயற்சி செய்தான். பலன் பூச்சியமே. இருவருமே அநாதரவான அப்பகுதியில் சேற்றில் சிக்கியிருக்கின்றோம் என்பதை உணர்ந்தனர்.

ஜெயினுக்கு, எப்படியாவது ரோனியைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமே மனதில் மேலோங்கி நின்றது. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் நண்பனை இழக்க வேண்டி நேரிடும் ... புரிந்து கொண்டான் ... விரைந்து

# புதைமணல்



தமிழில் – ஜெகன்

ஆற்றங்கரையோரமாக வேட்டைக்காரர்கள் எவராவது இருப்பின் அவர்களது உதவியைப் பெறும் நோக்கில் பின்வாங்கிச் செல்லப் பிரயத்தனம் செய்தான்.

ரோனி தனது இக்கட்டான நிலைமையைக் கூர்ந்து மனதில் ஆராய்ந்தான். அலஸ்காவின் அப்பிராந்தியப் பகுதியில் நதிகளில் கடல்களில் அடிக்கடி கால நிலைமைக்கேற்ப நீர்மட்டம் திடீரென ...மாறும். அதனால் நதி நீர் தரைகளில், காடுகளில் புகுந்து ஒரு சில மணித்தியாலத்துக்கு 8அடி தொடக்கம் 10அடி வரையான உயரத்திற்கு நிற்பதும் பின்னர் படிப்படியாகக் குறைந்து கொந்தளிப்பு நிலை மாறியும் அந்நீர் மீண்டும் நதிகளுக்குள்ளும் கடலுக்கும் சேருவதும் வழமையான ஓர் ஆபத்து நிறைந்த நிகழ்வாகும். அவ்வாறான ஓர் சேற்று மணற் பிரதேசத்திலேயே நண்பர்களான இவ்விரு வேட்டைப் பிரியர்களும் அகப்பட்டுக் கொண்டனர். சில வேளைகளில் நதியின் நீர் மட்டம் உயருமேயானால் இவ்விருவரும் இருக்கும் பகுதியில் 8அடி தொடக்கம் 10 அடி உயரத்திற்கு நதி நீர் உட்புக வாய்ப்புண்டு. அதுவும் அவ்வாறான வெள்ளப்பெருக்கு வேளையில் 10நிமிடத்தில் 1அடி உயரும் வகையில் நீர் எழும்பும்.

திடீரென, அவனது இருகால்களும் சேற்றில் மாட்டிக் கொண்டன. முன்னோக்கி நகர இயன்ற மட்டும் கால்களை இழுத்தெடுக்க முயற்சித்தான். பக்கவாட்டாகவும் முயன்றான் பாதங்கள் சுளுக்கிக் கொண்டன. தான் அச் சதுப்பு நிலத்தில் சிறிது சிறிதாகப் புதைவதை உணர்ந்தான். சில கணங்களுக்குள் அவனது முழங்கால்வரையில் இரண்டு கால்களையும் சதுப்பு நிலம் விழுங்கிவிட்டது.

புதையுண்ட நிலையில் இருப்பவர்களின் கதி அதோகதிதான். உதாரணத்திற்கு ரோனி சேற்றில் சிக்கியிருக்கும் பகுதி இரண்டு மணித்தியாலங்களில் 12அடி உயரமான வெள்ளத்தால் மூடப்படும் ஆபத்துண்டு.

எல்லாம் நினைவிற்குவரவே உடல் பயத்தால் நடுங்க, குளிராலும் நடுங்கியது. இரண்டு கைகளையும் ஊன்றி பக்கவாட்டாகக் கால்களை சேற்றிலிருந்து இழுக்க முயன்றான். பலனேதுமில்லை. உடல் மேலும் மேலும் சேற்றில் அமிழ்ந்திக் கொண்டிருந்தது. இப்போது அவனுடைய இடுப்புக்கும் சற்று மேல்வரை புதையுண்டு விட்டது.

அந்நேரம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் புற்றுநோயால் நீண்ட காலம் துன்பம் அனுபவித்த 52வயதில் மரணமான அவனது மனைவி மிஷெல்லினை எண்ணியவாறு ரோனி. அத்துடன் அவனது 17வயதுடைய மகள் ஜூலியா மற்றும் 10வயதுடைய மகன் அலெக்ஸி ஆகியோரின் முகங்களும் மனதில் மின்னல் போலத் தோன்றி மறைந்தன.

மிஷெல்லின் இறப்பதற்கு ஓரிரு வருடங்களுக்கு முன்பதாக ஒருநாள் இந்த சதுப்பு நிலப்பகுதியில் வேட்டை வேளையில் குடும்பமாக அவனை தூக்கிச் சென்று ... ஒரு கணம் நினைவு கூர்ந்தான். இப் பிள்ளைகளையும் இனிப் பார்க்கவே முடியாதோ இதுவே எனது மரணக் குழியாகப்போகிறதோ எனப் பலவாறான எண்ணங்கள் மனதில் ஓடின.


ஏங்கரேஜ் விமானத்தளத்தில் உள்ள அலுவலகத்தின் தொலைபேசி மணி "டிறிங், டிறிங்" என்று அலறியது. அது விமானப்படையினரின் மீட்புப்பணிக் குழுப்பிரிவின் அலுவலகத்துடன் உதவி கோரித் தொடர்பு கொண்ட ஜெயினின் அழைப்புக்கு நீண்ட காலமாக முயற்சித்த பின் கிடைத்த வெற்றி.

தகவல் கிடைத்த சில கணங்களில் தளத்தில் இருந்த ஹெலிகொப்டரில் விமானியான கப்டன் ... உதவி விமானி கப்டன் மைக்கிள் மற்றும் ... பொறியியலாளரான சார்ஜன்ட் ... பாராசூட் மூலம் மீட்கும் பணியாளர்கள் ஆகியோர் தாவி ஏறினர்.

(மீதி அடுத்த வாரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செவ்வாய் கிரகத்தின் துணைக்கிரகமான சந்திரனை ஆராய்ச்சி செய்வதற்காக ஆளில்லா [illegible] விண்கலத்தை ரஷ்யா அனுப்பியது. 200 கிலோ எடையுள்ள இந்த விண்கலம் தன் பணியை [illegible] முடிக்காமல் பூமிக்கு மீண்டும் திரும்புகிறது. பூமியின் [illegible] நுழையும் போது அந்த விண்கலமானது 20 முதல் 30 துண்டுகளாக உடையும். அவ்வாறு சிதைவடையும் துண்டுகள் பூமியில் மோதும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்வு [illegible] ஜனவரி மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 19 ஆம் திகதிக்குள் [illegible] விண்வெளி மையம் தெரிவித்துள்ளது. பூமியை நெருங்கும் போது அதன் துண்டுகள் [illegible] அவை உடைந்து சிதறுவதால் வெளியேறும் நச்சு எரிபொருள் மற்றும் கதிரியக்க பொருளால் மக்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.




[illegible] காலநிலையில் [illegible] குரங்குகள் [illegible] விளையாடுகின்றன. சில வேளைகளில் [illegible] குரங்குகளுக்கு இடையில் சண்டை [illegible] விடுகின்றனர். Macaques எனப்படும் [illegible] குரங்குகள் [illegible] அவைகள் [illegible] Jigokudani [illegible] குரங்கு வகையில் [illegible]



பிரித்தானியாவில் உள்ள விவசாயியான Sara Cross என்பவரது தோட்டத்தில் உலகின் மிகப்பெரிய கரட் விளைந்துள்ளது. இந்த கரட் ரக்பி பந்தின் அளவுக்கு இருக்கிறது. தனது பண்ணை நிலத்தில் விளைந்த மிகப் பெரிய மரக்கறி இது தான் என்று கூறுகிறார் சாரா. இந்த கரட் 12 இஞ்சி உயரமும், 5 இஞ்சி அகலமும் உடையது.


Hotel & Gastro formation



ஹோட்டல் துறையில் மேல்ப் படிப்பு இலவசம்

புறகிறஸ்சோ - இலவசம் - தொழில் மற்றும் துறைசார் நிபுணத்துவம்.

ஹோட்டல் முகாமைத்துவம், சமையல் மற்றும் சர்வீ வேலைகளுக்கான தொழில் பயிற்சிகள். [illegible] காலங்களுக்கு வேலையிடத்தில் [illegible] பெற்றுத் தரப்படும்.

நேரடியாக இணையத்தில் அல்லது தொலைபேசி மூலம் பதிவு செய்யலாம்.

www.progresso-lehrgang.ch

| Hotel & Gastro formation | Eichistrasse 20 | 6353 Weggis
| Telefon +41 (0)41 392 77 33 | Fax +41 (0)41 392 77 70
progresso@hotelgastro.ch | www.progresso-lehrgang.ch

உலகின் முதலாவது பல மொழி தமிழ் அகராதி, தமிழ், ஆங்கிலம், டொச், பிரெஞ்சு, இத்தாலி, நெதர்லாந்து, டெனிஷ், சுவிடிஷ், சிங்களம் ஆகிய பத்து மொழிகளைக் கொண்ட அகராதி, உங்கள் கையடக்கத் தொலைபேசியில் பதித்துக்கொள்ளலாம்.

மொழி பெயர்ப்பாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஐரோப்பா மற்றும் பயணம் செய்பவர்கள் அவசியம் வைத்திருக்க வேண்டிய ஒரு பொக்கிஷம்.

தொடர்புகளுக்கு சூரியகுமார் மகேஸ்வரன்,

இலங்கைத் தொடர்புகளுக்கு 077 266 36 25,

Tel. 0041 61 813 15 52

www.tamilkadai.ch

உங்கள் கைபேசியில் 10 மொழி அகராதி

für Handy



Sprache Wörterbuch

ஏஜன்டுகளுக்கு நல்ல கமிசன்

Sudar Oli

வார மலரை ஐரோப்பாவில் தபால் செலவை மட்டும் செலுத்தி வாராந்தம் இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.

பிறந்தநாள் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள் மற்றும் அனைத்து விளம்பரங்களும்

Sudaroli, Post fach 60,
4302 August, Switzerland,
Tel: 0041 61813 15 52

Mail: info@tamilkadai.ch




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் ரூ.29.88 லட்சத்துக்கு ஏலத்தில்...



20 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உயிரினம் டைனோசர். [illegible] டைரனோசரஸ் ரெக்ஸ். ரெக்ஸ் என்றால் [illegible] டைனோசர் வகையறாக்களிலேயே கம்பீரமான விலங்கு இது. [illegible] அமெரிக்காவின் [illegible]

இந்நிலையில் அமெரிக்காவின் [illegible] பல் ஒன்று கிடைத்தது. அது 6.7 [illegible] கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த டைனோசரஸ் ரெக்ஸ் [illegible] ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்தனர். [illegible] 337.8 [illegible] ரூ.29.88 [illegible] லட்சத்துக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது. டைனோசர் [illegible] அதிகாரிகள் [illegible] இது முதல் முறை என [illegible] கூறினர்.



நத்தார் மற்றும் வருடப்பிறப்பு என்று அடுத்தடுத்து பண்டிகைகள் வர பிரபலங்கள் தமது நண்பர்களுடன் பொழுதுபோக்குவது அதிகரித்துள்ளது, அடர்ந்த பனிப்பிரதேசத்துக்கு நடுவில் வெந்நீர் தொட்டியில் குளிக்கும் பிரபலங்கள் தான் இவர்கள், வழமையாக இவர்கள் குளிப்பதை படங்களில் காணலாம், இம்முறை நேரடியாகவே பார்க்கிறோம், Mario Falcone, Joey Essex, Lauren Goodger, Lauren Pope மற்றும் Chloe Sims இவர்கள் அனைவரும் நெருங்கிய நண்பர்கள் அனைத்து விடயங்களிலும்.

# 10வது மாடியில் இருந்து வீசிய குழந்தை உயிர்பிழைத்த அதிசயம் !



ஜப்பானில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் 10வது மாடியில் இருந்து வெளியே வீசப்பட்ட குழந்தை அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தது. குழந்தையை வீசிய தந்தை கைது செய்யப்பட்டார். ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள அபார்ட்மென்டின் 10வது மாடியில் வசிப்பவர் ஷிங்கோ ஹஷிமோட்டோ (37). மனைவி, 4 வயதில் மகளும், ஒரு வயதில் மகனும் உள்ளனர். மனைவியும் மகளும் வெளியே சென்றிருந்தனர். ஷிங்கோவும் ஒரு வயது குழந்தையும் மட்டும் வீட்டில் இருந்தனர். அப்போது, குழந்தை அழுததால் எரிச்சல் அடைந்த ஷிங்கோ பல்கனிக்கு தூக்கி வந்து, அதன் கழுத்தை நெரிக்க முயன்றார். அதே வேகத்தில் குழந்தையை வெளியே வீசினார். 10வது மாடியில் இருந்து வீசப்பட்ட குழந்தை, கீழே சுவரை ஒட்டியிருந்த புதரில் விழுந்தது. லேசான சிராய்ப்பு காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தது. போலீசாருக்கு ஷிங்கோ தொலைபேசியில் முறையிட்டு செய்தார். அவரை பொலிசார் கைது செய்தனர். அதிக வேலைப்பளு காரணமாக அவர் மன அழுத்தத்தில் இருந்ததாக கூறப்படுகிறது. அவருக்கு மனநல பரிசோதனை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.




ஒரு குழந்தை அழும்போது பூனையொன்று குழந்தையின் தலையில் தட்டி தூங்க வைக்கிறது, பூனையின் சொந்தக்காரரால் எடுக்கப்பட்ட இந்த வீடியோ இணையத்தில் மிகவும் பிரபல்யம் அடைந்துவருகிறது. இதன் மூலம் பூனைகளுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவு வெளிப்படுகிறது

# பெண்ணாக மாறினார்



அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் நகரை சேர்ந்தவர் வெய்ன் இவருக்கு 14 ஆண்டுகளுக்கு முன்பு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தனர். அவர்களுக்கு வெய்ன்- கெல்வின் என்று பெயர் சூட்டினார்கள். இவர்களில் வெய்னுக்கு சிறுவயதில் இருந்தே பெண்கள் போல அலங்காரம் செய்து கொள்வது பிடிக்கும்.

இந்தநிலையில் வெய்ன் பெண்ணாக மாறிவிட்டார். இதற்கான அறுவை சிகிச்சையையும் செய்து உள்ளார். பெண்ணாக மாறிய அவர் வெய்ன் என்ற தனது பெயரை நிகோலே என்று மாற்றி வைத்து உள்ளார். ஆனால் அவர் பெண்ணாக மாறியதற்கு அவரது தந்தை கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளார்.



சீனாவின் Hefei நகரில் இடம்பெறும் இந்த ஒளித்திருவிழா மிகவும் பிரபல்யமானது, பிரம்மாண்டமாக அமைக்கப்படும் இந்த படைப்புகள் நமது நாட்டின் வெசாக் பண்டிகை போன்றது, புராதன கதைகளை வெளிப்படுத்தும் விதமாகவும், சிற்ப வடிவிலும் உருவங்கள் அமைக்கப்பட்டு ஒளியூட்டப்படுகின்றன.

இரவு முழுவதும் பகல் போல காட்சியளிக்கும் இந்த நிகழ்வைக் காண சீனாவின் மற்றைய நகரங்களில் இருந்தும் மக்கள் திரண்டு வருகின்றனர்.

சீனர்கள் தை மாதம் 22 ஆம் திகதியை அவர்களின் புதுவருடமாக கொண்டாடுகிறார்கள் , இந்த ஒளித்திருவிழா அவர்களின் புதுவருடப் பிறப்பு வரையில் கொண்டாடப்படும்.

# மன்னார் தபால் பெட்டிகள்

தபால்கள் என்றால் அதற்குள் தகவல்கள் இருக்கும். ஆனால், இங்கே தபால்கள் சேகரிக்க வைக்கப்பட்டிருக்கும் அஞ்சல் பெட்டியே முக்கிய தகவலாக மாறியிருக்கிறது. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்ப திருவிதாங்கூர் மன்னரது ஆட்சி காலத்தில் குமரி மாவட்டம் குழித்துறையில் தபால் பெட்டி ஒன்று, 6 அடி உயரத்தில் இரும்பால் வைக்கப்பட்டது. 6 அரச சங்கு முத்திரைகள் பதிக்கப்பட்டுள்ள இந்த பெட்டியில் எழுத்துக்கள் மலையாளத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. வாகன போக்குவரத்து ஏதுமற்ற காலத்தில் குதிரையில் பணியாளர்கள் வந்து தபால்களை சேகரித்து செல்ல வசதியாக ஆங்காங்கே வைக்கப்பட்ட பெட்டிகளில் குழித்துறையில் வைக்கப்பட்ட பெட்டி மட்டுமே இப்போது எஞ்சியிருக்கிறது. இன்றும் துருப்பிடிக்காமல் இருக்கிறது என்பது மேலதிகத் தகவல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








**அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

எதிர்பார்த்திருந்த பணம் கைக்கு வரும். வீடு, மனை அமையும். கம்பீரமாகப் பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். சில நேரங்களில் உணர்ச்சிவசப்பட்டு பேசுவீர்கள். பிள்ளைகளை அவர்கள் எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தில் சேர்ப்பீர்கள். கன்னிப் பெண்களே! வருங்காலம் குறித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.




**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ஆம் பாதங்கள்**

நியாயத்தின் பக்கம் நிற்பவர்களே! சுக்ரன் சாதகமாக இருப்பதால் புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை தந்து முடிப்பீர்கள். பழைய சொந்தங்களைச் சந்திப்பீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். மனைவி வழி உறவினர்கள் உதவுவார்கள்.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2, 3-ஆம் பாதங்கள்**

அன்புக்குத் தலை வணங்குபவர்களே! எதிர்பாராத பணவரவு உண்டு. வி.ஐ.பிகளுக்கு நெருக்கமாவீர்கள். பெரிய பதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். உறவினர்கள், நண்பர்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உயரதிகாரி பாராட்டுவார்.




**புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

உதவும் கரங்கள் உடையவர்களே! குடும்பத்தில் நல்லது நடக்கும். சகோதரர் பாசமழைப் பொழிவர். பிள்ளைகளிடம் நல்ல மாற்றம் உண்டாகும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். இடமாற்றம், அதிகாரிகளுடன் மோதல்கள் வரக்கூடும். கலைத்துறையினர்களே! உங்களின் சம்பளம் உயரும். மூத்த கலைஞர்கள் உதவுவார்கள்.





**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

யார் நிழலிலும் வாழ விரும்பாதவர்களே! பெரிய காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வர வேண்டிய பணம் கைக்கு வரும். உங்களின் நிர்வாகத்திறன், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். சொத்து சேரும். கணவன்-மனைவிக்குள் விவாதங்கள் வந்துப் போகும். வாகனத்தில் கவனம் தேவை. பொது விழாக்களில் முதல் மரியாதைக் கிடைக்கும். கன்னிப் பெண்களே! உங்களின் புது முயற்சிகளை பெற்றோர் ஆதரிப்பர்.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள் அஸ்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்**

ஆர்ப்பாட்டமில்லாமல் சாதிப்பவர்களே! சோர்வு நீங்கி, உற்சாகம் அடைவீர்கள். திடீர் பணவரவு உண்டு. வாகனம் வாங்குவீர்கள். குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். பிள்ளைகளிடம் குவிந்துக் கிடக்கும் திறமைகளை இனம் கண்டறிந்து வளர்ப்பீர்கள். கன்னிப்பெண்களே! கெட்ட நண்பர்களை ஒதுக்குவீர்கள்.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள் சுவாதி, விசாகம் 1,2,3-ஆம் பாதங்கள்**

இளகிய மனசு கொண்டவர்களே! புது வேலைக் கிடைக்கும். பழைய கடனில் ஒரு பகுதியை தீர்க்க முயற்சி செய்வீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்த வகையில் உதவிகள் உண்டு. தடைப்பட்ட வேலைகள் முடியும். கன்னிப் பெண்களே! தடைபட்ட உயர்கல்வியை தொடருவீர்கள்.




**விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

புரட்சிகரமான சிந்தனை உடையவர்களே! ராசிநாதன் செவ்வாய் வலுவாக நிற்பதால் புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். குடும்பத்தில் நிலவி வந்த கூச்சல், குழப்பங்கள் நீங்கும். பழைய நண்பர்கள், உறவினர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் ஆழம் தெரியாமல் காலை விடாதீர்கள். வேலையாட்கள், பங்குதாரர்களால் விரயம் வரும்.





**மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்**

பொறுமையுடன் பழமையை புதுப்பிப்பவர்களே! பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். பெரிய பதவியில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். கலைத்துறையினர்களே! பழைய நிறுவனங்கள் உங்களை அழைத்துப் பேசும். மதிப்பு, மரியாதைக் கூடும் வாரமிது.




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள் , திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்**

சவால்களை கண்டு அஞ்சாதவர்களே! திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். நாடாளுபவர்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பர். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புதியவர்கள் அறிமுகமாவார்கள்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

சுற்றம் சூழ வாழ்வதை விரும்புபவர்களே! உங்கள் செயலில் வேகம் கூடும். பணவரவு உண்டு. உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். எதிலும் நம்பிக்கை பிறக்கும். நீண்ட நாள் கனவு நனவாகும். வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப்படுத்துவீர்கள்.




**பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

மனதில் பட்டதை பளிச்சென்று பேசுபவர்களே! அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் மனங்கோணாமல் நடந்து கொள்வர். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பண விஷயத்தில் அவதானமாக இருங்கள். திருமணத் தடை நீங்கும்.

## துன்பம் இல்லாமல் இன்பத்தைப் பெறமுடியாது - பாபா



உலகம் என்னும் நாடகமேடையில் ஆடிப்பாட மட்டும் மனிதன் வரவில்லை. அன்பினைப் பயிற்சி செய்து அதன் வாயிலாக இறைவனை அடைய வேண்டும் என்பதற்காகவே இப்புவிக்கு வந்திருக்கிறான்.

செய்யும் பணியை ஒரு வழிபாடாகவே செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். அது கடவுளிடம் உங்களை இட்டுச் செல்லும். பயன் கருதாமல் அர்ப்பணிப்பு உணர்வுடன் கடமையில் ஈடுபடுங்கள்.

மிக உயர்ந்த இருப்பாக கடவுள் வீற்றிருக்கிறார். அவருடன் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். எந்தப் பெயரால் அழைத்தாலும், எந்த வடிவத்தில் வழிபட்டாலும் அவர் ஒருவர் மட்டுமே. சத்திய நெறியைப் பின்பற்றாமல் அவரை ஒருபோதும் அடைய முடியாது.

உங்கள் நெஞ்சத்தில் பயமற்ற முயற்சி இருக்கட்டும். அந்த முயற்சியில் நேர்மை இழை யோடட்டும். செயலில் உண்மை துலங்கட்டும். இந்த சாதனையாளர்களுக்கு இறையருள் கிடைக்கும் நேரம் காத்திருக்கிறது.

மனம் என்னும் வயலில், அமைதி என்னும் விளைச்சலைப் பெறவேண்டுமானால், செருக்கு, பொறாமை போன்ற களைகளுக்கு இடம் அளிக்கக்கூடாது. சத்தியம், தூய்மை, நேர்மை போன்ற நல்ல பயிர்களை மட்டும் நடவு செய்யுங்கள்.

இன்றைய மனிதன் சத்தியத்தை தன் எதிரியாகக் கருதுகிறான். பொய்மையைத் தன் நண்பனாக மதிக்கிறான். சத்தியம், நம் உயிரையும் உள்ளத்தையும் வளர்க்கும் பசும்பாலைப் போல புனிதமானது. பொய்யோ உயிரை, உணர்வைக் கெடுக்கும் மதுவைப் போல தீங்கு தருவதாகும்.

செல்வம் நிறைந்த ஆடம்பர வாழ்வில் ஈடுபாடு வேண்டாம். ஆடம்பரத்தில் நாட்டம் வந்து விட்டால், தீயகுணங்கள் என்னும் திருடர்கள் மனதிற்குள் புகுந்து நம்மை குறுக்கு வழியில் தள்ளிவிடும்.

தன்னை உணர்ந்த மனிதன், இறையருளைப் பெறும் தகுதி பெற்றவன் ஆவான். புறவுலக நிகழ்ச்சிகளால் அவன் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை.

வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு செயலையும் கடவுள் கொடுத்த பரிசாக ஏற்றுக் கொள்ளுங்கள். இன்பம், துன்பம் எது வந்தாலும் இரண்டும் அவர் கொடுத்ததே. செல்லும் பாதையில் இடர் குறுக்கிட்டால், பக்தி என்னும் கவசத்தை அணிந்து கொள்ளுங்கள்.

துன்பம் இல்லாமல் இன்பத்தை பெற முடியாது. ஆரஞ்சுப்பழத்தில் கசப்பு சுவை கொண்ட தோலை உரித்தெடுத்தால், இனிய சுளை உள்ளே இருக்கிறது. அதுபோல,வாழ்விலும் துன்பத்தைக் கடந்தால் இன்பம் என்னும் இனிய சுளை கிடைத்துவிடும்.

எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவை. பேச்சும் செயலும் ஒன்றாக இல்லாவிட்டால், மனிதனின் மனதில் அமைதி தொலைந்துவிடும். முரண்பாடு கொண்ட மனிதன் ஒரு ஏமாற்றுக்காரனாகவே காட்சி அளிப்பான்.

ஒவ்வொருவரும் தங்களுடைய விதியை தாங்களே நிர்ணயம் செய்கின்றனர். முன்னேற்றத்திற்கான பாதையை நீங்களே தேர்வு செய்யுங்கள். உங்களுடைய சொந்த வேகத்தில், நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து புறப்பட்டுச் செல்லுங்கள். யாரோடும் உங்களை ஒப்பிட்டுக் கொள்ளாதீர்கள்.

## மனசே... மனசே... குழப்பம் என்ன...?



வயோதிக விவசாயி, தன் பேரனுடன் குளிர் நகரம் ஒன்றில் இருந்த பண்ணையில் வசித்தார். தினமும் அதிகாலையில், கதகதப்புக்காக அடுப்பின் அருகே அமர்வார். அப்போது பகவத்கீதை படிப்பார். இவர் என்ன செய்கிறாரோ, அதை அவரது பேரனும் அப்படியே செய்வான். ஒரு முறை தாத்தாவிடம், உங்களைப்போல் நானும் கீதை படிக்கிறேன். ஆனால், அர்த்தம் புரியவில்லை. இதை இப்படி கஷ்டப்பட்டு படிக்க என்ன தேவை இருக்கிறது? என்றான்.

குளிருக்காக அடுப்பில் கரி போட்டுக்கொண்டிருந்த தாத்தா, கரி இருந்த கூடையைச் சிறுவனிடம் தந்து, இதை ஆற்றுக்குக் கொண்டுபோய் நிறைய தண்ணீர் பிடித்து வா, என்றார். பேரனும் தண்ணீர் எடுத்தான். வீடு திரும்புவதற்குள் தண்ணீர் ஒழுகி விட்டது. தாத்தா அமைதியாக, நீ இன்னும் வேகமாக வா, எனக் கூறி மறுபடியும் அனுப்பி வைத்தார்.

இம்முறை சிறுவன் ஓடி வந்தான். ஆனாலும், கூடை காலியாகி இருந்தது. அது இயலாத காரியம் என்று புரிந்து கொண்டவன், போங்க தாத்தா! இது தேவையில்லாத வேலை, என்றான். அதற்கு முதியவர், எது தேவையில்லாதது? முதலில், நான் கூடையைக் கொடுத்தபோது, கரி ஒட்டிக்கொண்டு மிகவும் கறுப்பாக இருந்தது. ஆனால், அடிக்கடி தண்ணீரில் அமிழ்த்தி எடுத்ததால், அது இப்போது சுத்தமாகி விட்டது.

இதேநிலை தான் நமக்கும். கீதையைப்படிக்கும் போது, அதன் அர்த்தம் உனக்கு புரியாமலோ, நினைவில் நிற்காமலோ போகலாம். ஆனால், இளமை முதலே தொடர்ந்து படித்தால், மனதில் குழப்பத்திற்கே இடம்கொடுக்கமாட்டாய். நல்லெண்ணங்களை நிறைத்து சுத்தமாக வைத்திருப்பாய். அதுதான் கீதையின் மகிமை, என்றார்.

## குரங்குக்கு கோயில்

குரங்கு முகமும், மனித உடலும் கொண்ட ஆஞ்சநேயருக்கு இந்தியாவில் பல இடங்களில் கோயில்கள் உள்ளன. ஆனால், குரங்கையே மூலவராகக் கொண்ட கோயில், நேபாள தலைநகர் காட்மாண்டு அருகிலுள்ள ஸ்வயம்பு என்ற இடத்தில் உள்ளது. மலைப்பாங்கான இங்கு குரங்குகள் நிறைய வசிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நன்கொடைகள் யாருக்காக?

ம



# கிறிஸ்மஸ்

## சுவாரஸ்யமான தகவல்கள்

**Christ'smass** என்பதின் சுருக்கமே கிறிஸ்மஸ் ஆகும். இந்த வார்த்தை பழைய ஆங்கிலத்திலிருந்து பெறப்பட்டது. 1500 இன் மத்தியிலிருந்து கிரேக்க மொழியில் உள்ள ஓ என்ற எழுத்தை கிறிஸ்மஸ் முதல் எழுத்தாக பயன்படுத்தி xmas என சுருக்கமாக எழுதப்படுகின்றது.

கிறிஸ்மஸ் மரம் பச்சை, சிவப்பு, தங்க நிறம் என மூன்று பாரம்பரிய வண்ணங்கள் கொண்டிருக்கும். பச்சை நிறம் நீண்ட ஆயுளையும் மறு பிறவியையும் குறிக்கின்றது. சிவப்பு நிறம் இயேசுவின் ரத்தத்தை குறிக்கின்றது.

ஜெர்மனியர்கள் முதல் முறையாக இறந்த வாத்தின் இறகை கொண்டு கிறிஸ்மஸ் அட்டைகள் தயாரித்தனர்.

1870 வரை அமெரிக்காவில் கிறிஸ்மஸ் தினம் விடுமுறை தினமாக அறிவிக்கப்படவில்லை.

1962 ம் ஆண்டு அமெரிக்காவில் முதல் கிறிஸ்மஸ் தபால் தலை வெளியிடப்பட்டது.

ஆண்டு தோறும் அமெரிக்காவில் 30முதல் 35 மில்லியன் இயற்கை கிறிஸ்மஸ் மரங்கள் விற்கப்படுகின்றன.

அமெரிக்காவில் அண்ணளவாக 21,000 கிறிஸ்மஸ் மரக்கன்றுகளைக் கொண்ட தோப்புகள் உள்ளன.

2008 ம் ஆண்டு ஏற்கனவே இருந்த 400 மில்லியன் கிறிஸ்மஸ் மரங்களோடு கூடுதலாக 45 மில்லியன் கிறிஸ்மஸ் மரங்கள் நடப்பட்டன.

சுற்றுச் சூழல் ஆர்வலரான ரூஸ்வேல்ட் 1912 ம் ஆண்டு வெள்ளை மாளிகையிலிருந்து கிறிஸ்மஸ் மரங்களுக்கு தடை விதித்தார்.

கி.பி. 320 ம் ஆண்டு ரோமின் பிசப் போப் ஜீலியஸ் டிசம்பர் 25ம் தேதியை கிறிஸ்மஸ் தினமாக பிரகடனப்படுத்தினார்.

பிரபலமான நம்பிக்கைக்கு மாறாக கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களில் தற்கொலை விகிதம் குறைவாக உள்ளது. வசந்த காலத்தில் தற்கொலை விகிதம் அதிகமாக இருக்கிறது.

1850ம் ஆண்டுகள் வளர்க்கப்பட்ட கிறிஸ்மஸ் மரங்களே விற்கப்படுகின்றன.

வழக்கமாக 15ஆண்டுகள் வளர்க்கப்பட்ட கிறிஸ்மஸ் மரங்களே விற்கப்படுகின்றன.

அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் அண்ணளவாக20,000 கிறிஸ்மஸ் தாத்தாக்கள் உருவாக்கப்படுகின்றனர் - இவர்கள் அனைவருக்கும் பொதுமக்கள் தங்கள் மன அழுத்தத்திலிருந்து விடுபட்டு சந்தோசமான மனநிலைக்கு திரும்புவதற்கு உண்டான பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. கிருஸ்மஸ் இரவு உணவு உண்ணும் போது ஆங்கிலேயர்கள் காகிதத்தால் ஆன கிரீடத்தை அணிந்து கொள்கின்றனர். இந்த கிரீடத்தை கிறிஸ்மஸ் வெடி எனும் குழாயில் வைத்திருக்கின்றனர்.

அமெரிக்க சில்லறை வணிகத்தில் ஆறில் ஒரு பங்கு கிறிஸ்மஸ் வியாபாரமாக உள்ளது.


### மணமகள் தேவை

கிறிஸ்தவ A.O.G சபை. வயது 33. உயரம் 5'4" மணமகன் வெளிநாட்டில் தொழில்புரிகிறார். கணினித்துறையில் உயர் பதவி.

மணமகள் கீழ்க்காணும் தகைமை உள்ளவராக இருக்கவேண்டும்

உயர் குலத்தவர், படித்த, சிவந்த நிறமுடைய குடும்பப்பாங்கான மணமகள் தேவை.

அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் அனுப்பிவைக்கவும்

தொடர்புகளுக்கு:- 0757076548.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்


# சமுதாயம் கழுதைக்கு ஒப்பானதா?

வ. மஞ்சுளா,
உடுவில்.
**கேள்வி:** பித்தரே, தங்கள் திருமணம் பெற்றோரால நிச்சயிக்கப்பட்டதா? அல்லது காதல் திருமணமா?
**பதில்:** நான் யானை முகமாக்கும். விளங்கிக் கொண்டால் சரி (யானைதானே தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளும்)

இரா. செல்வநாயகம்,
பதுளை.
**கேள்வி:** சமுதாயம் கழுதைக்கு ஒப்பானது என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன் விளக்கம் தருவீரா?
**பதில்:** முன்னால் போக முயன்றால் முட்டி விழுத்துவதும் பின்னால் போய்ப் பார்ப்போமே என்று நினைத்தால் எட்டி உதைப்பதும் கழுதையின் இயல்பு. சமுதாயமும் பெரும் பாலும் அப்படித்தான்.



ம. பரஞ்சோதி,
வவுனியா.
**கேள்வி:** பித்தரே. இந்தக் காலத்தில் கணவர்மார் மனைவிக்கு அடங்கி நடப்பது புத்தி சாலித்தனமா? மனைவியை அடக்கி வைப்பது புத்திசாலித் தனமா?



**பதில்:** முன்னையது மதயாய்த் தும். பின்னையது ஒரு நப் பாசை. இந்தக் காலமென்ன, எந்தக் காலத்திலும் இதுவே புத்தி சாலித்தனம்.

ஒ. கதிர்காமநாதன்,
கொடிகாமம்.
**கேள்வி:** பித்தரே இந்தக் காலத்துப் பெண்கள் உத்தியோக மொன்றைத் தேடிக்கொள்வதிலா அல்லது திருமணம் செய்து கொள்வதிலா அதிக அக்கறை காட்டுகிறார்கள்?
**பதில்:** இரண்டுமே அதிகாரம் செலுத்தும் நோக்கம் கொண்டது தான். அலுவலகத்திலா, வீட்டிலா என்பதில் தான் வேறுபாடு.

பூ. சோதிலிங்கம்,
கொழும்பு 06.



**கேள்வி:** மனிதனால மீண்டும் ஒரு தடவை திரும்பப் பெற இயலாதது எது?
**பதில்:** இறந்த நேரம் மீண்டும் கிட்டவே கிட்டாது. மனிதன் அவமாகக் கழித்த நேரம் அவனது வாழ்வில் நஷ்டக் கணக்கே.




ப. பரந்தாமன்,
மட்டக்களப்பு.
**கேள்வி:** தனியார் கல்வி நிறுவனங்களில் வகுப்பு நடத்தும் போது பாடசாலை ஆசிரியர்கள் அக்கறையாக, கவனமாக பாடம் போதிப்பதன் இரகசியம் என்ன பித்தரே?
**பதில்:** மையில் கிடைக்கும் மேலதிகப் பணம் அவர்களை உற்சாகப்படுத்துகிறது போலும்.

த. ஊர்மிளா,
திருகோணமலை.
**கேள்வி:** திருமணம் முடித்த பின்னர் சீதனத்துக்காகச் சண்டை போட்டுக் கொள்பவர்களை யாரோடு ஒப்பிடலாம்?
**பதில்:** கிணறு வெட்டி முடித்த பின்னர், நிலையம் பொருத்தமில்லை என்று நிலையம் எடுத்துக் கொடுத்த சோதிடரோடு வாதாடும் வீட்டுக்காரரோடு ஒப்பிடமுடியும்.

வ. இ. நல்லதம்பி,
பூநகரி.
**கேள்வி:** பித்தரே, இந்தக் காலத்து இளைஞர் சமூகம் குறித்து உமது கணிப்பு என்ன?
**பதில்:** அவர்களதுஅறிவு-அபாரதம். பண்பு- அபாயம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 501



### மேலிருந்து கீழ்

01. ஐந்தாவது திதி
02. நாடு
03. நதி
04. மூக்கரிப்புடன் வரும்
05. அரற்றுதல்
07. எரியும் செயற்பாடு
09. சனியைத்தால் வரும்
12. இரும்பு ஆயுதங்களைத் தீட்டுவது இதனால்
14. கலைப் பண்ணத்தக்கவன்
15. கொடூரமான
16. கூட
17. வீரம் மிகுந்தவன்
18. போக அல்ல
19. காயம்

### இடமிருந்து வலம்

01. நாடில்லாமல் அலைபவன்
04. உளவு
06. வரலாறு
08. ரூபாவில் நூறில் ஒன்று
10. தாமரை
11. வறுமை
12. நெருப்பு
13. இராசி
15. சாகச் செய்
16. சோறு
17. இல்லம்
18. வயலில் கட்டுவது
20. கடன் வாங்கியவன்

அனுப்புபவர் பெயர்:...........................................

விலாசம்:...........................................

...........................................

கையொப்பம்:...........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 499

சொற்சிலம்பம் சொற்சிலம்பம் 501 போட்டிக்கான விடைகளை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2012 ஜனவரி 01ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜனவரி 15 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். சரி விடைகளைச் சரியாக எழுதியோர் பின் அதிர்ஷ்ட சீட்டிழுப்பின் மூலம் பரிசுக்குரியவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி வாரம் அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 498 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.அந்தாதி. 02.டமாரம், 03.சாலை, 04.சதி. 05.மதுரை. 07.அதிதி, 09.யிலாக்கேடு, 10.கரும்பு, 12.குரு. 13.தீன், 14.வில்லன், 15.மதில், 16.சம்பா, 18.சகல, 20.சகர

**இடமிருந்து வலம்**

01.அட்டகாசம். 06.மாலதி. 07.அது. 08.தாமிரம், 10.கதிரை, 11.தீமை, 12.குருதி, 13.தீரும், 15.மகேசன், 17.புகல், 19.தீரும், 21.கல், 22.ரதுகாவலன்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) மு.முத்துராஜா,
திகிரிலேன், தும்பளை,
பருத்தித்துறை.

(2) செல்வி. செ. நிவ்யா,
இல.6-8 AC வியாசர் வீதி,
தோணிக்கல்,
வவுனியா.

(3) வை. தனபாலசிங்கம்,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

(4) பா. நடராஜா,
இல.03,செட்டியார் தெரு,
கொழும்பு -11

(5) மிக்காயா ஸ்பென்சர்,
இல.38,ராணி மஹால்,
திகனை, இராஜவெல,
கண்டி.

(6) சேரன் அமரலிங்கம்,
இல.09,வின்சென்ட் லேன்,
கொழும்பு-06.

(7) க.தெய்வேந்திரன்,
இல.227, ஜெயபுரம் தெற்கு,
ஜெயபுரம்.

(8) எஸ். வரதராஜன்,
பிரதேச செயலகம், மட்டக்களப்பு.

(9) எம்.என். எஸ்.ரூஷ்கா ஆஸ்மி,
இல.276/A, சந்தை வீதி,
சாய்ந்தமருது-07

(10) சு.அரியாத்திரன்,
இல.176/4 A,ஜெம்பட்டா வீதி,
கொழும்பு -13.

### போட்டி இல. 498 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு**
நா.சந்திரசேகரம்,
இல.17பி, மன்னார் வீதி,
வவுனியா.

**2 ஆம் பரிசு**
R.யோகராசா,
இல 15/10,ஆனந்தபுரி, 2வது ஒழுங்கை,
திருகோணமலை


**3 ஆம் பரிசு**
ஜந்-லக்ஷன்,
பாணவன் ஆன்ரு-05.
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கடந்து செல்லட்டுமா...? 2




## கண்டுபிடியுங்கள்...




இரண்டு படங்களுக்கிடையேயும் ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள்.

## கஞ்ச வியாபாரியும் முட்டாள் உதவியாளர்களும்

முன்னொரு காலத்தில் பணக்கார துணி வியாபாரி ஒருவன் இருந்தான், பணக்காரனாக இருந்தாலும் படு கஞ்சன். அவனிடம் வேலை செய்தவர்கள் அனைவரும் படு முட்டாள்கள். புத்திசாலிகளை வேலைக்கு வைத்தால் அதிக சம்பளம் கொடுக்கவேண்டும் என்றும், தன்னிடமே படித்து தனக்கே போட்டியாக வியாபாரம் தொடங்கி விடுவார்களோ எனவும் நினைத்தான்.

ஒரு நாள் வழக்கம் போல விற்பனைக்காக வெளியூர் செல்ல முடிவு செய்தான். விலை உயர்ந்த துணிகளை எல்லாம் நான்கைந்து பெட்டிகளுக்குள் வைத்து மூடினான். எல்லாப் பெட்டிகளையும் ஓர் ஒட்டகத்தின் முதுகில் ஏற்றிவிட்டு மிகக்குறைந்த கூலிக்கு இரண்டு முட்டாள் வேலைக்காரர்களுடன் புறப்பட்டான்.

அளவுக்கு அதிகமாகப் பொருள்களை ஏற்றியதால் வழியில் பாரம் தாங்காமல் ஒட்டகம் கீழே விழுந்துவிட்டது.

வேலைக்காரர்களைப் பார்த்து அவன், 'நீங்கள் இங்கேயே ஒட்டகத்தைப் பார்த்துக் கொண்டிருங்கள். நான் பக்கத்தில் இருக்கும் ஊருக்குச் சென்று இன்னொரு ஒட்டகம் கொண்டு வருகிறேன். பிறகு சுமையை இரண்டு ஒட்டகத்திலும் சமமாக வைத்துப் பயணத்தைத் தொடரலாம். நான் இல்லாதபோது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். நான் வருவதற்குள் மழை வந்துவிட்டால் பெட்டிகளை எப்படியாவது நனையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்', என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

வேலைக்காரர்கள் இருவரும் சரியான முட்டாள்கள். இது தெரிந்தும் குறைந்த கூலி கொடுத்து அவர்களை விலை பேசியிருந்தான் வணிகன். எல்லோரும் எவ்வளவோ சொன்னார்கள். ஆனால், வியாபாரியோ வழித்துணைக்குத்தானே இவர்களை அழைத்துச் செல்கிறேன். எடுபடி வேலை செய்யத்தானே. இதனால் எனக்கு ஒரு பாதிப்பும் வராது என்று நினைத்தான்.

சிறிது நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது.

'நம் முதலாளி பெட்டிகளை நனையாமல் பார்த்துக் கொள்ளச் சொன்னார். இப்பொழுது என்ன செய்வது?' என்று கேட்டான் ஒருவன்.

பெட்டிகளுக்கு உள்ளே இருக்கின்ற துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகள் மேலே போட்டு மூடுவோம். பெட்டிகள் நனையாமல் பார்த்துக் கொள்வோம், என்றான் அடுத்தவன்.

இருவரும் பெட்டிகளுக்குள் இருந்த விலையுயர்ந்த துணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டிகளுக்கு மேல் போட்டனர். அதனால் துணிகள் எல்லாம் மழையில் நனைந்து ஈரமாகிவிட்டன.

ஒட்டகத்துடன் திரும்பிய வணிகன், ஐயோ! என்னடா செய்தீர்கள்? துணிகள் எல்லாம் நனைந்து வீணாகிவிட்டதே, என்று கோபத்துடன் கத்தினான்.


'முதலாளி நீங்க சொன்னபடி பெட்டிகள் நனையாமல் இருப்பதற்காகத் துணிகளை எல்லாம் அதன் மேலே போட்டோம். அந்தப் பெட்டிகள் சிறிது கூட நனையவில்லை. நீங்களே பாருங்கள்', என்றான் அவர்களில் ஒருவன்.


'முட்டாள்களான உங்களுக்கு இனி என்னிடம் வேலை இல்லை', என்று அவர்களை விரட்டினான் வணிகன்.

கொஞ்சம் காசுக்கு சிக்கனம் பார்க்கப்போய் முதலுக்கே நஷ்டம் வந்ததை எண்ணி வணிகன். வேதனையுடன் ஊர் திரும்பினான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலகின் மிகக் குள்ளமான தீயணைப்பு வீரர்

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தின் Pittsburgh என்ற இடத்தைச் சேர்ந்தவர். இவரது உயரம் 4 அடி 2 அங்குலமாகும். வயது 19. குறிப்பிட்ட சில செயல்களைச் செய்ய கடினமாக இருந்தாலும் இந்த வேலையை நேசிப்பதாக கூறுகிறார் இந்த குள்ள மனிதர்.









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org